Nov; 1913. Reg. No. M. 1080

சிவமயம்

# தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

# The "Tamilian."

## A Monthly Tamil Journal.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு."—குறள்.

பண்டிதர். எஸ். முத்துஸ்வாமிப் பிள்ளை. பத்திராதிபர்.

தொகுதி II } 1089 ஐப்பசி { பகுதி II

பொருளடக்கம்.

| | | பக்கம் |
|---|---|---|
| (1) | அருமையன் கதை. ஸ்ரீ. K. N. சிவராஜுபிள்ளையவர்கள். B. A. | 33 |
| (2) | தமிழர்களின் தங்கலைவிருத்தி ஸ்ரீ. தி. லக்ஷ்மணபிள்ளையவர்கள். B. A. | 35 |
| (3) | ஸ்ரீ. இராமலிங்க சுவாமிகளுடைய ஜீவகாருணிய போதனைகள். சுவாமி உருத்திர கோடீசுவரர். | 39 |
| (4) | உலகம் பலவிதம். ஸ்ரீ D. அகஸ்தியலிங்கம் பிள்ளையவர்கள். F. T. S. | 42 |
| (5) | வள்ளல் பெருமக்கள். | 43 |
| (6) | மஹான்கள் திருவாய் மொழிகள். | 46 |
| (7) | நாகபூச்சி அல்லது நாங்கில்புழு. | 49 |
| (8) | பத்திரிகை வாசிப்பதனால் உண்டாகும் பயன். S. D. P. | 52 |
| (9) | காகமும் கவளையும். | 54 |
| (10) | தமிழர்களின் தற்கால நிலைமை. I | 57 |
| (11) | இரங்கற்பாக்கள். | 61 |
| (12) | சமாசாரத்திரட்டு. | 62 |

1913.
Printed and published by S. Muthuswamy Pillai.
at the "SUNDARA" Press, Puthenchanthai, Trivandrum.

அநேக தங்கமெடல்களும் வெள்ளிமெடல்களும
பெற்ற டாக்டர் H. L. பட்லிவாலாவின்.
உலகப் பிரசித்தமான மருந்துகள்.

Ague mixture or Pills:—மலேசுரம், குளிர் சுரம் முதலிய எவ்வகை சுரங்களுக்கும் கைகண்ட மருந்து. விலை ரூபா க.

Haretone:—நரைமயிர் கறுக்க திவ்யமான மருந்து. விலை ரூ ௨.

Tonic Pills:—நரம்புத்தளர்ச்சி, பலக்ஷயம் முதலியவற்றை நீக்கி ஆச்சரியப்படத்தக்க தேகபலத்தை உண்டுபண்ணும் குளிகைகள். விலை ரூபா க௰.

Tooth Powder:—பற்பொடி. நாட்டு மூலிகைகளாலும் இங்கிலீஷ் மருந்துகளாலும் செய்யப்பட்டது, வாய்நாற்றம் பற்புழு பக்கட்டு முதலியவைகளைத் திட்டமாய்க் கண்டிக்கும். விலை அணா ௪.
பெரிய பொட்டணம் அணா அ.

Ring worm Ointment:—புழு வெட்டுக்கு மகத்தான மருந்து ஒரே நாளையில் சொஸ்தப்படுத்தும். விலை அணா ௪.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு இங்கிலீஷில் எழுதி வீ. பீ. மூலம் பெற்றுக்கொள்ளலாம்,

Dr. H. L, Batliwalla's Co,

*Warli Labaratory*, Dadar, Bombay.

---

சந்தாவிவரம்.

| | ரூ | அ | பை |
|---|---|---|---|
| போஷகர்களுக்கு | 4 | 0 | 0 |
| சந்தாதார்க்கு | 2 | 0 | 0 |
| பினாங்கு. சிங்கப்பூர்முதலிய வெளிநாடுகளுக்கு. | 3 | 0 | 0 |
| தனிப்பிரதி | 0 | 4 | 0 |

குறிப்பு, முதல்மூன்று மாதங்களுக்குள்ஒருவருஷ சந்தா முன்னதாகச் செலுத்தும் சந்தாதார்க்கும் போஷகர்களுக்கும். 8 அணா விலையுள்ள "கற்பகவல்லி" என்னும் நாவல் ஒருபிரதி இனாமாகக்கொடுக்கப்படும்.

(2) அடுத்தஜனவரி மாதம்முதல் மாணவர்களுக்குப் போட்டி உபந்யாசங்கள் கொடுக்கப்படும்.

Pandit. S. Muthuswami Pillai.
Managing Editor.
The "TAMILIAN"
Trivandrum.

சிவமயம்

# தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

## The "Tamilian."

**A Monthly Tamil Journal.**

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்; மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு."—குறள்.

பண்டிதர். எஸ். முத்துஸ்வாமிப் பிள்ளை. பத்திராதிபர்.

| தொகுதி II | 1089 ஐப்பசி | பகுதி II |
|---|---|---|

## அருவியன் கதை

—:—

(17—வது பக்கத்தொடர்ச்சி)

இங்கிவர் இன்பம் இவ்வா றெய்திட இரவென்னாளும்
தங்கிருள்க் கிடங்கின் சீரும் தலைவனும் புலுதன் சீரும்
மங்குலேர் மங்கும் பாச பன்னியா மாதின் சீரும்
அங்குறை ஏவலாளர் சீருமே அறைதல் செய்வாம், (23)

(வேறு)

எத்திசைக்கும் எல்லை எண்ணலற்றகன்ற பாதலம்
உய்த்த கூரிருள்த்திரள் மற்றோங்கு பொங்க ரங்கமேல்
தொத்து காரெயிற்று மின் துவைத்தலா மடங்கலும்
பெற்றலால் பிறங்கல் மீதுறங்கு வான மானுமே.

ஆரவாரத் தாலும் மஞ்சும் அஞ்சு காரினாலும் மீ
சேரவாம் புலாவினாலும் தீய ஜீவனாலும் நோம்
பேரவாவில் உயிர்கள் வவ்வு பெற்றியாலும் மு
கோர பாதலம் கொதித்தெழுந்த வேலை போலு

கருமையிற் சிறந்து தோன்று கங்குலோடு மங
பெருமையிற் பரந்த அம்பு ராசியேசு கேசமும்

பருமையிற் றடிந்தமா படிந்த கார்ப் பிழம் பெலாம்
தருமை யென்ன மேனி பாதலத்தர் தாங்கு பான்மையே, (26)

உருண்டகண்ணர், ஒழுகுவாயர், உயருமூக்கர், எரியென
மருண்டகோபர், வாங்குநாவர், மடமை வஞ்ச இருளினும்
இருண்டஎண்ணர், எற்றுகாலர், இம்பாற்ற செம்புதோய்
சுருண்டரோமர், சுட்டவாகம் சொல்லு தோற்ற மல்லவே. (27)

நெஞ்சில் வஞ்சமதுமறந்து நேர்ந்திடார் நன்னெறியுமே
துஞ்சினுங் கனவிலன்ன தோற்றமென்ன லாகுமோ?
நஞ்சினில் நறவும் நாறு நாயின் நாவி வாசமும்
பஞ்சினிற் பழமும் பாறை தன்னிற் பாலும் வாய்க்குமே? (28)

மதியிருண்டு மதுவயின்று வழிமறித்து மனுடநற்
கதிமறந்து களிசிறந்து கலகமேற்கண் உடையராய்
புதியவாந் தீமொழிபுகன்று புலைவளர்ந்த குடியர்போல்
விதியில் பாதலத்தர் வாயில் வீழ்வ தீயில் தீயவே. (29)

மைவடித்த அந்தகாரம் வைத்த கானல் தத்துற
கைவடித்த மாவுங் கண் கனல் பொடித்த மாவுமே
மெய்வெடிக்க விட்டபூசல் விண்ணேறோடு விம்மினே
பொய்வெடிக்கு மன்னோர்வாய்ப் புடையிடிக் கிடென்னலாம். (30)

நல்லரில்லை, பொல்லரில்லை; நடுவுமில்லை, நடுவிலா
வல்லரில்லை; வலியரில்லை சிறியரில்லை; வாய்வதாம்
எல்லுமில்லை, இருளுமில்லை, இன்பமில்லை; துன்பமே
இல்லையாகி நின்றவூரின் தன்மை யென்று மொன்றரோ. (31)

ஆயனத* தேசமென்னும் அந்தகார பந்தமாம்
…ய தேசமீது கோன்மை செய்பவன் திகில்தரு
…ன் வாய்கடித்த கண்டன் கண்ணில் மின்னல் காட்டுவோன்
…கள் தாமும் பேயென்னஞ்சும் பெற்றியுற்ற புளூதனே. (32)

… மின்ன லேய்ந்தபோல் இசைந்துமன் புளூதன் கை
…மாது பாசபன்னி பீடு கூறலாவதோ ?
…ள் சிவன் வவ்வி நிற்கும் லோகமேலும் நாயகன்
…மேலும் ஆட்சி பூக்கு மூடெனப் பிறங்கினள். (33)

… Hades

(வேறு)

பாதலத் தெங்கணும் பாவு சீர்த்தியோன்
மாதவன் மனதிற்கும் வாய்த்த காதலன்
தீதெலாஞ் செய்கினுந் தெரிகிலா னெனப்
பூதலத் தோர் மறம் புரிய வெண்ணினன். (34)

மணமிகு மேனியள் வனப்பு வாய்ந்த நற்
குணமிகு உருதெசிக் கொம்பனுள் தனை
கணப்பொழு திம்பரே கடத்திச் செய்குவென்
அணங்கினுக் கணங்கும் யாழ்வலற்கு மங்கனே. (35)

என்றுதன் மனத்திடை எண்ணித் தூதர்பால்
ஒன்றுரை செய்தனன், "உலகி லின்னொடி
சென்றுரு தேசிலை சிறப்புறு வொளி
துன்று பெண் மதியினைத் துகைந்து சேர்" மென. (36)

"அம்மதி கவர்ந்திவண் அடையிலே இருள்
செம்முகம் தேயமே தேங்கும் தேசொடு
எம்முகம் தனில் நகை யிலங்கு" மென்றனன்
தம்முகம் மலர்ந்து தூதுவரு தாவினர். (37)

K. N. சிவராஜபிள்ளை.

---

## தமிழரின் நுண்கலைவிருத்தி
(8—வது பக்கத்தொடர்ச்சி)

இனி, தமிழர்கள் சங்கீதத்தை, (அதாவது, தமிழ் சங்கீதமே னும், ஆரிய சங்கீதமேனும்) பயிலுவதில் எவ்வளவு புத்திகூர்மை காட்டியிருக்கிறார்களென்று அறிந்துகொள்வது தகுதியாம். முற் காலத்தில், பாணபத்திரன் முதலியோர் யாழில் தமிழ்ச்சங்கீதம்பயின்று பெரும் வள்ளல்களால் அபரிமிதமான நன்கொடையும், வெகுமானமும், பெற்று விளங்கியதைப் பலரும் அறிந்திருப்பார்கள். யாழ்வல்லவராகிய ஒருவருடைய அகந்தையை அடக்குவதற்காக, திருஞானசம்பந்த சுவாமிகள் யாழ்மூரியென்னும் தேவாரப்பதிகத்தை இயற்றியிருப்பதும் தெரிந்தவிஷயமே. இது கி. பி. 7-வது நூற்றாண்டிலாம், பிற் காலத்தில் அக்பர் சக்ரவர்த்தி அரசாண்டபோது அதாவது கி. பி. 16-ாவது நூற்றாண்டில், தென் இந்தியாவிலிருந்து ஒரு நாயுடு வட இந்தியாவில் குடிப்புகுந்து இக்காலத் துத்தியாகய்யர், தீக்ஷதர், முதலிய

இசைப்புலவர் இயற்றியிருக்கும் சாகித்தியங்களுக்கு இணையான சாகித்தியங்கள் இயற்றியிருந்தாரென்றும், அவைகளில்சில இப்போதும் வடஇந்தியாவில் பாடட்பெற்று அநந்தம் ஜனங்களுக்கு இன்பத்தை விளைக்கின்றதாகவும், கேள்விக்கு எட்டியிருக்கின்றது. பிந்தியகாலத்தில், ஆரிய சங்கிதத்தில் இசைப்புலமை காட்டியவருள் அருணாசலக் கவிராயர், வேதநாயகம்பிள்ளை, அசுவதி திருநாள், சுவாதி திருநாள் மகாராஜா, இரவிவர்மன்தம்பி, பொன்னய்யா நட்டுவர், கோவிந்த மாரார் முதலியோர் தமிழரைச் சேர்ந்த வகுப்பினர், அதாவது திராவிடரேயாம்.

இதுநிற்க, சங்கீத வித்தையில் தேர்ச்சியுற்றுக் கீர்த்திபெற்ற தமிழர்களைப் பற்றிச் சற்றே விவரிப்பேன். தமிழரில் உயர்ந்த வகுப்பினரென்று கொள்ளப்படுகின்ற வேளாளர் முதலியோருள் சங்கீதப் பயிற்சி அதிகம் பரவியிருந்ததாய்க் காணப்படவில்லை. முற்காலத்தில் பாண்குடி மக்களிடத்தும், கணிகையரிடத்தும், சங்கீதம், நிலைபெற்றிருந்ததென்று முன் கூறினோமே. பிந்தியகாலங்களில், கணிகையரிடத்தும், நட்டுவாங்கம் பயின்ற நட்டுவரிடத்தும், நாகசுரம் வாசிக்கின்ற ஓச்சரிடத்தும், அது நிலைபெற்றிருந்தது. அது இபபோதும் அப்படியே காணப்படுகின்றது. வேளாளருள் ஒரு பிரிவினராகிய ஓதுவார்களிடத்தில் மட்டும் வைதீகத் தமிழ்ச்சங்கீதம் நிலைபெற்றிருக்கக்காண்கிறோம். அது பெரும்பான்மையும், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, முதலிய பக்திநூல்களிலுள்ள பாடல்களை ஒட்டியே வருகின்றது. முற்கூறிய நட்டுவர், ஓச்சர், கணிகையர், என்னும் மூவகுப்பாரும் ஆரிய சங்கிதத்தைப் பயின்று, அதில் அபரிமிதமான தேர்ச்சியை அடைந்து, கீர்த்திபெற்று வருகின்றார்கள். இவர்களாலேயே ஜனங்களிடையில் சங்கீதஞானம் பரவிவருகின்றது. நட்டுவர்களில் விசேஷ பிரபலம் அடைந்தவர்களாகச் சிலருடைய பெயர்களைத் தற்காலத்தில் குறிப்பிட்டுக் காட்டும்படியாயிருக்கின்றது. நமது திருவிதாங்கூரில், கொல்லம் 1022-மாண்டு நாடுநீங்கிய சுவாதி திருநாள் மகாராஜா அவர்களுடைய காலத்தில், வடிவேலு, பொன்னய்யா, சிவாநந்தம், சின்னய்யா, என்ற நான்கு நட்டுவர்கள் சங்கிதத்தில் சிறப்புற்று விளங்கி, அம்மகாராஜாவினால் ஆதரிக்கப்பெற்று வந்தார்கள். அ[illegible]ல், சிவாநந்தம் நட்டுவாங்கத்திலும், பொன்னய்யா இசைப்புலமையிலும், வடிவேலு வாய்ப்பாட்டிலும், பிட்டில் வாத்தியத்திலும், பெயர்[illegible]ற்றிருந்தார்கள். வடிவேலு நட்டுவருக்கு இவ்வரசாங்கத்தில் [illegible]ம் 110 ரூபாய் சம்பளமிருந்தது. அக்காலத்தில் 100ரூபாய் சம்[illegible]ல் [illegible] இக்காலத்

தில் 700 ரூபாய் சம்பளத்திற்குச் சமமாகும். இதனால், அம்மகாராஜா வடிவேலு நட்டுவருடைய திறமையை எவ்வளவாக மதித்திருந்தார்களென்று விளங்குகின்றது. வடிவேலு நட்டுவர், சங்கீதத்தில் இசைப் புலமைச் சிங்கமாகிய திருவையாற்றுத் தியாகய்யருடன் பழகியிருந்ததாகக்கேள்வியுண்டு. இவருக்குச் சமமான வாய்ப்பாட்டுக்காரர் பின்ஒரு காலத்தும் உண்டானதில்லையென்பது, திருவிதாங்கூர் சங்கீத வித்துவான்களில் தலைமை வகித்திருந்த பரமேஸ்சுவரபாகவதர் அவர்களுடைய வாக்குமூலத்தால் தெரியவருகிறது. வடிவேலு நட்டுவர் இயற்றிய ஒரு அற்புதமானவர்ணம் இப்போதும் நிலைபெற்றிருக்கிறது. சங்கதியின் கோர்வையழகிலும், கம்பீரத்திலும், இதற்கிடான வர்ணம் இந்து சங்கீதத்திலில்லை. இவர்சகோதரர் பொன்னய்யா நட்டுவர், அநேக வர்ணங்களும், சுரசித்துக்களும், கீர்த்தனங்களும், இயற்றியிருக்கின்றார். அவையிற் சில, இன்னும் சாகித்திய உலகில் முதன்மைபெற்று விளங்குகின்றன. பிற்காலத்தில் வீரசுவாமி நட்டுவர், அப்பாசுவாமிப்பிள்ளை, சபாபதி நட்டுவர், வேணுநட்டுவர், பிடில் வெங்குப்பிள்ளை முதலிய அநந்தம்பேர்கள் சங்கீத வித்தையில் மிகுந்த புகழ்படைத்திருக்கின்றனர். இதை விஸ்தாரமாய் எடுத்துக்கூற இங்கு இடமில்லை. கொல்லம்1022-மாண்டு, நாடுநீங்கிய சுவாதிதிருநாள் மகாராஜா அவர்கள் சங்கீதத்தில் அபரிமிதமான தேர்ச்சியும், இசைப்புலமையும் உடைத்தாயிருந்தார்கள். அவர்கள், 33 திருவயதிற்கே வாழ்ந்திருந்தனராகினும், அதற்குள்ளாக அவர்கள் 12 பாஷையில் வல்லமைபெற்றும், சங்கீதத்தில் வர்ணங்களாகவும், சுரசித்துக்களாகவும், பதங்களாகவும், கீர்த்தனங்களாகவும், தில்லானக்களாகவும், சுமார் 200 க்குக்குறையாமல் இசைப்பாக்கள் இயற்றிப் பெரும்புகழ் படைத்திருக்கின்றார்கள். அவர்களுடைய சாகித்தியங்களே இக்காலத்தில் இந்நாட்டிலும், சிறுபான்மையில் பாண்டிய சோழ நாடுகளிலும் நடைபெறுகின்றன. இவர்களுடைய பெருமை இவ்வளவினதென்று மட்டிட்டுச் சொல்லமுடியாது. கோவிந்தமாரார் என்னும் மலையாள மகாவித்துவான், அயல்நாட்டில் தியாகையரென்னும் மகாவித்வானிருக்குமிடத்திற் சென்று, அவரிடம் தமது அரிய சங்கீதத் தேர்ச்சியைக் காட்டி. அவரால் வியந்து பாடப்பெற்றனர். கோவிந்தமாரார் வர்ணங்களாகவும், பதங்களாகவும், அநேக சாகித்தியங்கள் இயற்றி, அவை இப்போதும் கீழ்நாடுகளில் பாடப்பெற்று வருகின்றன. அவர் பதங்கள் தியாகய்யர் கீர்த்தனத்திலும் இனிமை மிகுந்திருக்கிறதென்று சங்கீதத்தில் தீர்க்க திருஷ்டியுடைய திருமலையா நாயுடு என்னும் தற்கால வித்வான் கூறுகின்

னார். அவை கோவிந்தசுவாமி பதங்கள், வர்ணங்கள், என்னும் பெயரால்
விளங்குகின்றன. இவர்களெல்லாம் தமிழ் வகுப்பினரைச் சேர்ந்த
திராவிடர்களே.

இதுநிற்க, சங்கீதத்தைக் கலியாணப்பந்தல்களிலும், கோவி
ல்களிலும், தெருக்களிலும் மகாஜனங்களுக்கு வாசித்துக்காட்டி, அ
வர்களுடைய சிரக்கம்பமும், வெகுமதியும்பெற்று, ஜனசமூகத்தில் சங்
கீதஞானம் பரவிநிலைபெறச் செய்கின்றது நாகசுரவாத்தியம் வாசிக்கின்
ஓச்சரென்னும் தமிழர்களே. ஜனங்களிடையில் இவ்வளவு பரக்கச்
சங்கீத ஞானம் வளர்ப்பதற்கு இவர்களுக்கீடான சங்கீத வித்வான்கள்
யாருமில்லை. இவர்களுடைய பெருமையை இவ்வளவென்று வரை
யறுத்துச் சொல்ல முடியாது. சங்கீதத்தில் இராகவிஸ்தாரம், தானம்
பல்லவி கீர்த்தனங்கள், முதலியன, அசாத்தியமான மனோதர்மத்தோ
டும், லயம்இம்மிவிடாமலும், வாசித்துவரும் நாகசுரக்காரர்கள் அநேகர்
அநேகர். இவர்கள் விசேஷமாகச் சோழநாட்டிலும், பாண்டிநாட்டிலும்,
ஒவ்வோரிடத்து ஒவ்வொருகாலத்தில், உலகப்பிரசித்தி பெற்றுவிளங்
கியிருக்கின்றார்கள். இவர்களால் உலகத்தில் சங்கீதஞானம் ஜனங்களி
டையில் பரவிவருவதும்தவிர, வாய்ப்பாட்டு வித்துவான்களும், பற்பல
வாத்தியங்கள் வாசிக்கின்ற வித்துவான்களும், இவர்களிடம்கிடைக்கி
ன்ற கேள்வியினால்சங்கீதநடையும்,மனோதர்மமும் பெற்றுப் பிரகாசிக்கி
ன்றார்கள். இவர்களைச்சேர்ந்த தவில்காரர் முதலியோர்லயத்தில்இவர்களு
க்கு இசைந்த தகைமையுற்றிருக்கின்றார்கள். இப்படிலயஞ்ஞானமும் உல
கத்தில்பரவுகின்றது. நாகசுரக்காரரில் சோழபாண்டிய நாடுகளில் உலகப்பி
ரசித்தி பெற்றவரில் சிலருடைய பேர்களைமட்டும் கீழேகுறிக்கின்றேன்.
இவர்களெல்லாம் கழிந்த ௯௰அல்லது ௪௰ வருஷங்களுக்குள்ளாகப்
பெயர் வாங்கினவர்கள். அவர்கள்பெயர் களாவன, மீனாக்ஷிபுரம் சுப்பு
மன்னார்/குடிச்சுப்பு, ஆனையப்பன் முத்து, முத்துவீரன் சிவக்கொழுந்து
சிங்காரவேலு, நடேசன், பக்கிரி, வைத்தியநாதன், சுப்பய்யா, முதலி
யோர். இவர்களுடைய பெயர்கள்கணக்கிட்டு முடியாது. இரண்டு
மூன்று தலைமுறைக்குள், தமிழராகிய நாகசுரக்காரர் இத்தனைபேரும் இவ்
வளவு உயர்ந்த தகுதியுடையவராய் இருந்திருப்பார்களானால் ஒருநூற்றா
ண்டில் எத்தனைபேர் இருந்திருப்பார் களென்றும் அநேகநூற்றாண்டுகளா
ய்எத்தனை ஆயிரம்பேர் இருந்திருப்பார்களென்றும், ஊகித்துக்கொள்
ளலாமே. இதுஇப்படியெல்லாமிருக்க, தமிழர்களுக்குள் இயற்கையாய்
சங்கீதமென்ற நுட்பக்கலையில் எவ்வளவுஞானம் இருக்கின்றதென்று

யோசித்துப் பாருங்கள். இதனால், இவ்விஷயத்தில் முயன்றால் உலகத்திலெந்தஜாதியாருக்கும் தமிழர் பின் போகார்களென்று உறுதியாய்ச் சொல்லலாம். இந்தநுட்பக் கலையில்எப்படியோ, அப்படியேமற்ற ஓவியம் செய்யுள் இயற்றல், முதலிய நுட்பக்கலைகளிலும், அவர்களுடைய கூர்மையானபுத்தி நுழையக்கூடியதே யென்று நிதானிப்பதற்கு என்ன தடைஇருக்கின்றது? என்னுடையஎளிய அபிப்பிராயத்தில் எல்லாக்கலைகளிலும் உலகத்தில் சிறப்புற்று விளங்குதற்கு, தமிழர் போதுமானஇயற்கைவாசனையும், புத்திவல்லமையும், உடையவரென்றே தோன்றுகின்றது. அவ்வகைக்கலைகளில் அவர்களுடைய புத்திசெலுத்தும்படியானவழிதிறந்துகொடாதகுறையொன்று மட்டுமேஇருக்கின்றது. தட்டார்களிலும், தச்சர்களிலும் ஓவியம் அல்லதுசித்திரவிஷயமாய் இயற்கைஞானம்பொருந்தியிருக்கின்றதென்பதைஅவர்களுடையசாதாரணமானதொழில்களிலும் அவர்கள்தந்தவேலை முதலியகலைகளிலும் உலகத்திற்குக் காட்டியிருக்கின்ற புத்திசாமர்த்தியம் திருஷ்டாந்தப் படுத்துகின்றது. மேற்கத்தியஜாதியார்செய்த உருப்படிகள் எவ்வளவுவிசித்திரமாயிருந்தாலும அந்தவேலையைப்பார்த்து அதுபோலவே செய்யக்கூடியதிறவான்கள்நம்முடையதட்டார்முதலிய ஜாதியாரில்இன்னும் இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கல்விமட்டும எராளமாய் ஏற்றுவித்தால் எவ்விதச்சித்திரவேலையும் காலாந்திரத்தில் செய்யத்தருந்தவராவாரென்பதில்எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இயற்கையான புத்திகூர்மையில்அவர்கள் எவர்களுக்கும்பின் போவாரல்லர். உயர்ந்தமுன்மாதிரிகளில்லாது, புத்தியெல்லாம் காடேறுகின்றது, மாற்சரியமே உயர்ச்சிக்கு முக்கியகாரணம். அந்நியஜாதியாரோடு அவர்மாற்சரிய மடையும்படிவாய்ப்புக்கொடுக்கவேண்டும். உலகத்தில் எந்தஜாதியாரும மாற்சரிய புத்தியில்லாமல் முன்னுக்குவருவது சாத்தியமல்ல. மேற்கத்திய ஜாதியாரும ஒவ்வொரு வித்தையிலும் மாற்சரியம் கொண்டு உழைப்பதினாலேயே அவ்வித்தையில் முன்னுக்கு வருகின்றார்கள்.

T. லெக்ஷ்மணபிள்ளை. B. A.

———:::———

## ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகளுடைய ஜீவகாருணிய போதனைகள்.

(13—வது பக்கத்தொடர்ச்சி.)

———::———

இனிச் சீவ இம்சையைப்பற்றியும், கொலை புலைகளைப்பற்றியும் சுவாமிகள் கவனித்து, இம்சையினாலும், கொலையினாலும் பலமிருகங்கள், பறவைகள் வருந்துதலைப் பற்றிப் பலவாறாக எடுத்துக் கூறினர்.

மனிதர் ஆனந்தத்திற்காகவும், பொழுது போக்கிற்காகவும், விளை

யாட்டிற்காகவும், வேறுகாரணங்களுக் காகவும் மிருகாதிசீவர்களை வருத்து தலும், தம்உணவிற்காக அச்சீவர்களைக் கொல்லுதலும், அவற்றின் உடம்பைச் சிதைத்து உண்ணுதலும் சிறிதும் பொருந்தாத தீய செய்கைகளாகும் என்றனர்.

அறிவிற்சிறந்த அன்பர்களே! சிலர் தம்மைக் கருணையாளர் எனக் கூறிக் கொண்டு ஏழைகளுக்கு அன்னதானம் முதலியன செய்வர்; அவர் மற்று அநேக விஷயங்களிலுங்கருணையுடையவர் களாகவே இருப்பர். ஆனால், சில விலங்குகள்; பறவைகள் முதலியவைகளை இம்சிப்பர்; தாமே கொல்வர்; பிறரைக் கொண்டு கொல்விப்பர்; அவற்றின் ஊனைப்புசிப்பர்; அவர் இவ்விஷயங்களில் கருணையின்றி நடப்பர். அந்தோ! அவரது அறியாமைக்கு என்செய்வது! என்சகோதரர்களே! இம்சையும், கொலையும், புலையும் நிகழாவிடத்துத்தான் சீவகாருணியம் உண்டு; ஆகவே, சகோதரர்களே! சீவகாருணியம் உடையேமெனக் கூறிக் கொண்டு சீவ இம்சையையும், கொலையையும், புலையையும்மேற் கொண்டு இருப்பார் தன்மை அறிவுடையோரால் வெறுக்கற் பாலதேயாகும்.

மிருக பக்ஷிகளுக்குப் பிறரால் பயமும் கொடுமையும், கொலையும் நேரும்காலத்தும் அச்சீவர்களை எவ்விதத்தாயினும் அத்துன்பங்களினின்றும் நீக்க முயற்சி செய்தலே நலம் என்றுசுவாமிகள் தெளிவுறித்தினர்.

சீவப்பிராணிகளைக் கொடுமையாக நடத்தா நெறியும், அவற்றைக் கொல்லாநெறியும், அவற்றின் புலால் உண்ணுநெறியுமே உயர்ந்தநெறிகள்என்பது இராமலிங்கப்பிரபுவின் கருத்தாகும். சீவ இம்சையும், கொலையும், புலைப் புசிப்பும் உடையவர்களெல்லாம் காருணியம், இல்லாதவர்களென்றும், மிருகபக்ஷி களாகிய எவ்வுயிரும் நம்முயிர் போலென் றெண்ணி அவைகளிடத்து உண்மை அன்பு பாராட்டுபவர்களே சன்மார்க்கத்தா ரென்றும் அப்பெருமான் யாவர்க்கும் அறிவு கொளுத்தினர். இது அவ்வண்ணல், எத்தன்மையரான கல் நெஞ்சோரும் உருகப்பாடிய " அருள்விளக்கமாலை " யால் நன்கு விளங்கும்.

சீவப்பிராணிகளுக்கு நேரும்துன்பங்களை நாம் நிவர்த்திசெய்யுங் காலத்தில் அவைகளுக்கு மனத்தின்கண்ணும், முகத்தின்கண்ணும் இன்பம் உண்டாகின்றது; அதைக்காணும் தமக்கும் அவ்வாறே இன்பம் உண்டாகிறது; ஆகவே, சீவர்களிடத்துச் சீவர்கள் உண்மையாகிய காருணியம் வைப்பதே நன்றாகும்.

அச்சீவகாருணிய வொழுக்கத்தை மனிதர்கள் யாவரும் தம்மாவியன்றவரை திறம்பாது அவசியம் உறுதியாகப் பிடித்தல் வேண்டும்? சீவகாருணிய வொழுக்கமே ஞானவழியென்றும் சீவகாருணிய வொழுக்க மில்லாமையே அஞ்ஞானவழி யென்றும் அறிதல்வேண்டும். சீவகாருணிய மில்லாது செய்யப்படுகின்ற செய்கைகளெல்லாம் பிரயோசனமில்லாத மாயாஜாலச் செ

ப்கைகளே யாகும் என்று இராமலிங்கவடிகள் தம் நூல்களில் மற்பல விடங்களில் போதித்தனர்.

இத்தகைய பரசிவகாருணிய நல்லொழுக்கத்தில் தாமும் மிகுந்து, பிறரையும் அதனைப் பெரிதும் மேற்கொள்ளுமாறுசெய்து, உலகத்தில் எல்லாச்சீவர்களுக்கும் இன்பத்தை உண்டாக்கல் வேண்டுமென்பதே இராமலிங்கப் பெருமானுடைய பேரிச்சை யாகவிருந்தது. அது.

“ சற்சபைக்குரியார் தம்மொடுங்கூடித் தனித்தபே ரன்புமெய்யறிவும்
நற்சபைக்குரிய வொழுக்கமுமழியா நல்லமெய்வாழ்க்கையும் பெறவே
சிற்சபைநடமும் பொற்சபைநடமுந் தினந்தொறும் பாடிநின்றாடித்
தெற்சபைபுலகத் துயிர்க்கெலா மின்பஞ் செய்வதென் னிச்சையாமெந்
தாய் ” என்றும்.

“ எவ்வுயிர்த்திரளு மென்னுயிரெனவே யெண்ணிநல் லின்புறச்செயவு
மவ்வுயிர்களுக்கு வருமிடையூற்றை யகற்றியே யச்சநீக்கிடவுஞ்
செவ்வையுற்றுனது திருப்பதம்பாடிச் சிவசிவவென்று கூத்தாடி
யொவ்வுறு களிப்பா லழிவுறு திங்கே யோங்கவு மிச்சைகாணெந்தாய். ”
என்றும்.

“ கருணையே வடிவாய்ப் பிறர்களுக்கடுத்த கடுந்துயரச்சமாதிகளைத்
தருணநின்னருளாற் றவிர்த்தவர்க்கின்பந் தரவும் வன்புலைகொலையிரண்
டொருவியநெறியி னுலகெலாநடக்க வுஞற்றவு மம்பலந்தனிலே டும்
மருவியபுகழை வழுத்தவுநின்னை வாழ்த்தவு மிச்சைகாணெந்தாய். ’
என்றும்.

“ மண்ணுலகதிலே புயிர்கள்தாம் வருந்தும் வருத்தத்தை யொருசிறி
தெனினுங்
கண்ணுறப்பார்த்துஞ் செவியுறக் கேட்டுங் கணமும்நான் சகித்திட
மாட்டே
னெண்ணுறுமெனக்கே நின்னருள்வலத்தா லிசைத்தபோதிசைத்த போ
தெல்லாம்
நண்ணுமவ்வருத்தந் தவிர்க்கநல்வரந்தானல்குத லெனக்கிச்
சையெந்தாய். ” என்றும்,

“ இவையலாற் பிறிதோர் விடயத்திலிச்சை யெனக்கிலை யிவை
யெலாமென்னுட்
சிவையொடுமமர்ந்த பெருந்தயாநிதிநின் றிருவுளத் தறிந்தது தானே
தவமிலேனெனினு மிச்சையின்படிநீ தருதலே வேண்டு மிவ்விச்சை

நவையிலாவிச்சை யெனவறிவிக்க வறிந்தன னவின்றன னெந்தாய்,"

என்றும் அப்பெருமான் கடவுளை நோக்கி விண்ணப்பஞ்செய்து கொண்ட வாற்றல் உணர்க.

(தொடரும்.)

உருத்திரகோடீசுவரன்.

---

## உலகம்பலவிதம்.

---

என்ற பெரியோர் மொழியைச் சரியா புணர்ந்தால் உலகத்தினிடத்துக் குற்றங்காண்பது அரிது. உலகம் பலவிதமாதலால் அதனிடத்துத் தோன்றியிருக்கும் மதங்களும் அம்மதரகசியங்களை மனதிற் பதிக்கும் அறிவும் வித்தியாசப்படுகிறது. இதற்குக்காரணம் யாதெனில் மனது மிதமற்றசங்கற்ப விகாச மடைந்திருப்பதுதான். மனதுபலவிதமான போக்கைப்பின்பற்றுகிறநிமித்தம் அபிப்பிராய வித்தியாசங்களும் நவீனக் கொள்கைகளும் ஏற்படுகின்றன. ஆயின் சுவலாபத்தை அல்லது சுயஉத்தேசத்தைக் கருதாது புறப்படுவிக்கும் நன்மையான எவ்வித முயற்சிகளும்கொள்கைகளும், அபிப்பிராயங்களும் ஈற்றில் நன்மையாகவும் உண்மையாகவும் முடிவுபெறும் என்பதற்கு ஐயமில்லை.

சிலர் உலகவிஷயமாக உழைப்பார்கள். அவர்களுடைய உத்தேசம் பிரத்தியக்ஷ உலகானுபவங்களாகிய, ஜனக்ஷேமசுவாதந்திரியம், நியாயாநியாயம், தேசசுகாபிவிர்த்தி கைத்தொழில், பாஷை முதலியவைகளைக் கருதியிருக்கும். சிலர் ஆத்மீக சம்பந்தமான மதவிஷயமாக உழைப்பார்கள். இவர்களுடைய உத்தேசம், மார்க்கசமரசம், அதனதன் மதரகசியங்களை அவ்வவ்வாறு போதிப்பித்து உண்மைகளை ஆராய்ந்தெடுத்து விளம்புதல், கர்மானுஷ்டானம், நூல்கற்பித்தல் இவைகளைக் கருதியிருக்கும். மேற்சொன்ன இரண்டு விஷயங்களில் இது ஆவசியம் இது ஆவசியமன்றென்று சொல்வதற்கில்லை. இரண்டும் ஆவசியமே. ஏனென்றால் பிரத்தியக்ஷத்தில்நின்றுதான் அப்பிரத்தியக்ஷத்திற்குப் போகவேண்டிய திருக்கிறது. நிர்க்குண உபாசனையில் நின்றுதான் சகுணோபாசனைக்குச் செல்லவேண்டியதிருக்கிறது. இருட்டில் நின்றுதான் வெளிச்சத்தை யறியக்கூடும். அஞ்ஞானத்திலிருந்துதான் ஞானத்தை யடையலாம். ஆகையினால் உலகவிஷயமாக உழைப்பவர்கள் வீண் உழைப்பாளிகளென்றும் ஆத்மீகசம்பந்தமானஉழைப்பாளிகளே உண்மை உழைப்பாளிகளென்றுஞ் சொல்வது பிசகு. கிரகஸ்தனில்லாமல் ஞானியில்லை ஞானியில்லாமல் கிரகஸ்தனுமில்லை. அதுபோலவே ஜடம், சித்து, விதி மதி, இவைகளை ஒன்று சேர்த்துப் பாராது பிரித்துப் பார்ப்பது பெரும்

தவருகமுடியும். உண்மையும் அவ்விதமே. தவிரவும் உலகத்திலெவ்விஷயமும் ஈஸ்வரசங்கல்பமில்லாமல் உண்டாகிறதில்லை. சங்கல்பமே உலகத்திற்குக் காரணம். வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை. கீழுமில்லை அவனன்றி ஓரணுவும் அசையாது.

"ஆன்றவறி வுடையோர்பா லறிவுநா னடங்கினர்பால்
வான்றவநான் வளர்நன்மை பூண்டார்பால் வண்புகழ்நான்
தோன்றுமிகு திறலோர்பாற் காமமுருத் தொல்வலிநா
னூன்று பொருளனைத்தினுக்கு முயிராகி யுள்ளேனுன்."

மாட்சிமை தங்கிய புத்தியுடையோரிடத்து அறிவாக விளங்குவது நான். மனம் அடங்கிய வானப்பிரஸ்தர்முதலிய தவத்தின ரிடத்துள்ள பசி தாகங்களை அடக்கும் சாமர்த்திய ரூபமாகிய மேலானதவம் நானுகின்றேன். விளங்காநிற்கும் மிக்கவலியோரிடத்து ராகங்களையடையாத சாமர்த்திய ரூபம் நானுகின்றேன். தாவரசங்கம ரூபமான சர்வபிராணிகளிடத்தும் உயிராகியிருப்பதும் நானே.

என்று பகவான் கீதையில் கூறுகிருர். இதனுல் சுவார்த்தமாக வல்லாது (தன்னயததைக்கருதாது) பொது நன்மைக்காக உழைக்கும் புண்ணிய புருஷர்களிடத்து கடவுளே அறிவாக விளங்குகிருரென் றேற்படவில்லையா? ஆகையினுல் பொதுநன்மைக்குழைக்கும் புண்ணியர்களை ஆக்ஷேபியாது, தடங்கல் செய்யாது இயன்ற உதவிசெய்து இலகுப் படுத்துவோ மாக, அவர்களை உற்சாகப்படுத்துவோ மாக.

D. அகஸ்தியலிங்கம்பிள்ளை. F. T. S.

---

## வள்ளல் பெருமக்கள்.

---

### ஆந்துரு கார்னீஜி,

ஆங்கிலப்பயிர்ச்சி புடையவர்களில் இம்மகானைப்பற்றிக் கேட்டிராதவர் அபூர்வராகவே இருப்பார்கள். இவருடைய பிதா ஸ்காட்லாந்து தேசத்தவர். தன் நாட்டில் பிழைப்புக்கு வழியில்லாதாக, அவர் அமேரிக்காவுக்குச் சென்று பித்ச்பர்க்கு என்னுமிடத்தில் ஒரு பஞ்சாப்பீஸில் கூலியாக வேலை

செய்துவந்தார். 12 வயதானபொழுது நமது கார்னீஜியும் வாரமொன்றுக்கு 5 ஷில்லிங் (3 ரூ-12 அணா) சம்பளத்தில் தகப்பனார் கூடவே கூலிவேலை செய்து வந்தார். அவ்வளவு சிறுவயதாயிருக்கும்பொழுதே சுயசம்பாத்தியத்தினால்தன் குடும்பத்தைக் காப்பாற்றும் பாக்கியம்பெற்றதை எண்ணி கார்னீஜி மிகமகிழ்ந்துகொள்வாராம். ஆனால் அந்த வேலையினால் அவர் அடைந்த கஷ்டங்கள் பல எனினும் அவர் மனத் தளர்ச்சியடையவில்லை. கஷ்டங்கள் எல்லாம் நன்மைக்காகவே என்னும் மனவுறுதியோடு, தன் நிலைமையைச் சீர்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தாராம். "நான் கூலிவேலைசெய்யும் சிறு பையனாயிருந்தபொழுதும் பெருங்கருமங்களைப் பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன். நான் ஏதோ பல அரிய செயல்களை முடிக்கப்பிறந்திருப்பதாக ஒரு நல்லெண்ணம் என் மனத்தில் விளங்கி எனக்கு மகிழ்ச்சியு முயிற்சியும் ஊட்டிற்று." என்று பிற்காலத்தில் அவர் ஒருநண்பருக்கு எழுதினாராம்.

ஆம்! எந்நிலைமையிலிருப்பினும் மேலான நோக்கத்தோ டுழைப்போரே ஆண்மக்களாவார்.

14-வது வயதில் நமது கார்னீஜி ஒரு தந்தித் தபால் சேவகரானார். இதனால் அவருக்கு வாரமொன்றுக்கு 12-ஷில்லிங் சம்பளம் கிடைத்ததாம். "இந்த உத்தியோக மாற்றமானது எனக்கு நரகத்திலிருந்து சுவர்க்கத்துக்கு வந்தது போலிருக்கிறது." என்று அவர் ஒரு சிநேகிதருக்கு எழுதினாராம். தந்தித் தபால் சேவகனாயிருக்கும்பொழுதே தந்தியடிக்கும் தொழிலையுங் கற்று, அபாயகரமான ஒருதருணதில் அவராகவே ஒரு தந்திசமாசாரத்தையும் அனுப்பி அதிகாரிகளின் மதிப்புக்குப் பாத்திரராக வருஷமொன்றுக்கு 60 பவுன் சம்பளமுள்ள ஒரு உத்தியோகத்துக்கு உயர்த்தப்பட்டார். இந்தப்பதவி கிடைத்த கொஞ்சக்காலத்துக் கப்பால் ஒரு உயர்தர தந்திமாஸடர் உத்தியோகம் கிடைத்தது. அப்பொழுதுதான் அமெரிக்கா முழுதையும குழப்பத்துக் குள்ளாக்கின "Civil War" என்ற சண்டை தொடங்கிற்று. அவர் சண்டையிற் கலந்து போர்செய்யவில்லையானாலும் தந்தியுத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் பொழுது ஒரு கம்பி முறிந்துதெறித்து அவருக்குப் பெருங்காயமொன்று உண்டாயிற்று. அப்பொழுது அவர் பிரத்யட்சமாகக்கண்ட பிணக் குவியல்களும், இரக்தப்பிரவாகமும அவர் மனதைமிகவருத்தியதனால் அதுமுதல் போர்மேல் அவருக்கு மிகப்பகையும் சமாதானத்தில் மிகவிருப்பும் உண்டாய்விட்டதாம்.

நாளுக்குநாள் அவருடைய செல்வம் வளர்ந்துகொண்டேவந்தது. மண்ணெண்ணெய் எடுக்கும் தொழிலைக்கைக்கொண்டபொழுதுதான் சீமான் என்னும் பெயருக்கு அவர் உரியவரானார். அந்தத்தொழிலில் பெரும் ஊதியம் அவ

ருக்குக் கிடைத்தும் அதைத் தன் சிநேகரான ராக்பெல்லருக்கு விட்டுவிட்டு இரும்புவெட்டும் தொழிலைக் கைக்கொண்டார். இத்தொழிலினாலேயே அவர் அறுநூறுலட்சம் பவுனுடைய ஆஸ்திமானானார். அமருடையாண்பர் John D. Rockfeller 1200 லட்சம் பவுனுடைய சீமானானாலும் நமது கார்னீஜியைப் போல் அவ்வளவு புகழ்பெற்றவராகவில்லை. இதுவரையிலும் பொதுஜனோபகார விஷயமாக கார்னீஜி 270 லட்சம்பவுன் செலவுசெய்திருக்கிறாராம். புத்தகாலயங்கள் (Libraries) ஸ்தாபனஞ்செய்வதில் அவருக்கு வெகுபிரியம். அவரது பெயரால் இதுவரையிலும் உலகமுழுதும் ஸ்தாபனம் பெற்ற புத்தகாலயங்கள் 1800. அவருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தபொழுது அக்குழந்தைக்கு 70 லட்சம் பவுன் பிதுரார்ஜிதம் உண்டென்று பத்திரிகைகள் கூறினவாம். அப்பொழுது கார்னீஜி சொன்னதாவது. "எனது மகளையும் மனைவியையும் மிகுந்த செல்வமுடையோர் என்னும் சாபத்துக்கு உள்ளாக்கமாட்டேன். பிறரை மகிழ்விக்கும் சக்தியைத்தருவதினால் மட்டிலுமே செல்வம் நமக்கு இன்பம் தருவதாகின்றது. பிறர்க்கு மகிழ்ச்சியுண்டாக்குவதே மேலான இன்பம். சுதந்திரமாகச் செலவு செய்யத் தன் னிடம் ஏராளமான பணமிருந்தும் லோகோபகாரார்த்தகமாகச்செலவு செய்யாதிறப்போன் போற்றுவாரற்றும் புகழ்வாரற்றும் பாழ்படுகின்றான்."

வெளிநாட்டாரைப் போலவே நமதுநாட்டுச்சீமான்களும் பொதுநல விஷயங்களுக்காகப் பெரும்பொருள்வழங்க முன்வரத்தொடங்குவது நற்காலக்குறியேயாம்.

டாக்றறர் ராஸ்பிஹாரி கோஷ் என்னும் வங்காளப்பிரபு கல்கத்தா சர்வகலாசாலையில் சாஸ்திரீகப்பயிர்ச்சியின் அபிவிருத்திக்காக 10 லட்சம் ரூபாய் நன்கொடைஅளித்திருக்கிறார். இதுவரை இம்மகான் தருமவிஷயங்களுக்காகச் செலவுசெய்த ரூபாய் 35 லட்சம். இன்னும் 25 லட்சம் பாக்கியிருக்கிறதாம். அதையும் பொதுநலவிஷயங்களுக்காகவே செலவுசெய்யக் கருதியிருக்கிறாராம்.

நமது நாட்டின் அபிவிருத்திக்கு இத்தகைய கொடையாளிகள் ஆயிரக்கணக்காய் முன் வரவேண்டுவது மிகஅவசியமே. பணமின்றி லௌகீக விஷயங்கள் நடவா. பணமுடையோர் பொதுஜனோபகாரமான விஷயங்களில் தலையிட்டுழைக்க முன் வருவது நமது நாட்டில் அபூர்வம். ஆகவே பொதுநன்மையின் பொருட்டு உழைக்க முன்வரும் தேசாபிமானிகளுக்குப் பொருளுதவி செய்யவேணும் நம்நாட்டுச் சீமான்கள் துணிவுகொள்ளாராயின் அவர்கள் பெற்ற செல்வத்தினால் அவர்கள் அடையும் பயன்யாது. நல்லுழைப்பாளிகள் கைப்பட்டால் மட்டுமே பணத்துக்கு நலம்புரியும் சக்தியுண்டு. உலோபிகளான தனவான்கள் பலர் தமது நிதிகளை பூமிக்குள் புதைத்துவைத்து மண்டொழிந்தனராக நாம்பன்முறையும் கேட்கின்றோமல்லவா? அத்தகைய

மூடச்செய்கைகளினல் அவர்களுக்கேனும் உலகத்திற்கேனும் எட்டுணை நன்மை உளதாயிற்றோ? சென்னை பச்சையப்பமுதலியாரவர்கள் வித்தியா விஷயங்களுக்காகப் பொருளுதவாமல் மண்ணிற் புதைத்து மறைந்திருந்தால் தென்னிந்திய நாட்டார் தற்காலத்திய கல்விப் பெருக்கடைந்திருப்பார்களோ? வருஷாவருஷம் எத்தனையோ வாலிபர்கள் கலாசாலைப்பட்டம் பெற்று நாட்டுக்கு அலங்காரமான உத்தம புருஷர்களாய் வெளிவருவது அப்புண்ணிய புருஷரது கொடைநலத்தினு லன்றோ? ஆலயப்பணிக்கும் அன்னச்சத்திர ஸ்தாபனத்துக்கும் பொருளுதவுவதினல் ஒருவரும் புண்ணிய புருஷர்கள் ஆகார்கள். தருமகர்த்தாக்களின் பேராசையாலும் மடாதிபதிகளின் மடமையினலும் அநேக ஆலயங்கள் சீருஞ்சிறப்புங்கெட்டுப் பாழ்படுங்காலத்திலும் பின்னும்பின்னும் புதுக்கோவில்கள் கட்டத்தொடங்குவது எவ்வளவு பேதமை! அன்னச்சத்திரங்கள் ஏற்படுத்துவதனல் அநேக ஏழைகளின் பசிப்பிணிநீங்கலாமெனினும் உண்மையாக இப்பொழுது ஏழைகளுக்கு அன்னச்சத்திரங்களில் சோறுகிடைக்கின்றதில்லை. வாயாடித்தனமுடைய வல்லடிவழக்கர்களே நன்மையடைகிறார்கள். அன்றி ஏழைகளுக்கே உணவு கிடைக்கின்றதாக வைத்துக் கொண்டாலும் அத்துடன் அவர்கள் நிலைமையெல்லாம் சீராய் விடவுமில்லை. பசிக்கும்பொழுது சோறுகிடைக்குமென்னும் நம்பிகையினல் அவர்கள் நாளுக்குநாள் சோம்பேறிகளாகவே ஆகிறார்கள். உத்தம ஜீவிதம் செய்யவேண்டுமென்ற உணர்ச்சி அவருக்கில்லாதாகின்றது. ஏழைகளின் வயிற்றுப்பசியை நீக்குவதற்கு உணவளிப்பதோடு ஆத்மபசியை நீக்குவதற்கான கல்வியையும் பயிற்றுவித்தால் நம் நாடு பொன்னாடாகிப் பொலிவுறுமே? பூமிக்குப் பாரமாய்க் காலந்தள்ளும் இரப்போர் தொகையும் சுருங்குமே. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கு மளிக்கவல்ல வித்யாதானத்தினும் மேலான தானமும் உளதோ, “ வித்யாதனம் சர்வதனல் பிரதானம் ” ஆதலின் வித்யாதானமும் சர்வதானல் பிரதானமே.

ஆகலின் மேலேகூறிய கொடையாளரைப் போன்றவர்கள் பலர் இன்னும் முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

பத்திராதிபர்,

## மஹான்கள் திருவாய்மொழிகள்.

—:::—

தென்னாட்டுச் சிரேட்டர்கள் தலைவரான ராஜா, ஸர், மாதவராயவர்களைப்பற்றிக் கேட்டிராதார் இந்நாட்டில் இரார்கள். நமது திருவிதாங்கோட்டை “ மாதிருகாநாடு ” (Model state) என்னும் பெயர்க்குரியதாக்கினவர் அம்மஹானே.

அவர் 1087—வது வருஷத்தில் சென்னை சர்வகலாசாலைச் சங்கத்து அக்கிராசனம் வகித்து அவ்வாண்டு விஜயம் பெற்ற கலாசாலைப்பட்டதாரிகளுக்குப் புகட்டிய புத்திமதிகள் எந்நாட்டவர்க்கும் எக்காலத்தும் பொருந்துவனவாயிருப்பதால் அவற்றைப் பூரணமாக மொழி பெயர்த்து நமது பத்திரிகாபிமானிகளின் அறிவுக்காக வெளிப்படுத்துகிறோம்.

## (1) காலத்தை மதித்து செவ்வையாய்ச் செலவு செய்

நமது ஜீவிதகாலத்தில் செய்யவேண்டுவதாக எவ்வளவோ உள்ளன. ஆனால்ஜீவிதகாலமோ சொற்பமானது மனிதருடையவாழ்நாள் வெற்றித்தாழ்வடைவது அவர் காலத்தைச்செலவு செய்யும் வகையைத் தழுவியிருக்கின்றது. உள்ளமும் உடம்பும் சுகமாயிருப்பதற்குத்தேகப்பயிர்ச்சியும்(Rest)விச்ரமமும் விளையாட்டும் (Recreation) இன்றியமையாதன. இவைகளுக்காகச் சிறிது காலம் போக்கவேண்டுவது அவசியமே. அங்ஙனம் செய்யாதிருப்பதும் தவறே, ஆனால் அதிகத்தூக்கத்திலும, சோம்பியிருப்பதிலும் வீண்விளையாட்டுதளிலும பயனற்ற சம்பாஷணையிலும் காலத்தைப் போகாதே. உனது ஜீவிதநோக்கத்துக்குப் பொருந்தாதனவாகிய விஷயங்களில் காலம் போக்காதே. உனது ஜீவிதத்துக்கு உபகாரமில்லாத புராதன அல்லது அன்னியபாஷைகளைக் கற்பதற்கு நன்றாக எண்ணித்துணிய வேண்டும்,

உன்பயிற்சிகள் உன்ஜீவிதநோக்கத்துக்குப் பொருந்துவனவாக இருத்தல் வேண்டும். அல்லதுஅதற்கு முரண்படாதனவாகவாவது இருத்தல் வேண்டும். நீ ஒரு தாசீல்தாராக இருக்க விரும்புவாயானால் இரசாயனசாஸ்திரம் கற்பதில் காலம் போக்காதே. நீ வக்கீலாக விரும்புவாயானால் வானசாஸ்திரத்தை நாடாதே. அடிக்கடி தொழில் மாறுதல் அநாவசிய காலப்போக்கை உண்டுபண்ணும். உனக்கு எல்லா எந்தல்களும் இருந்தால் மட்டிலுமே நாவல் வாசித்தல் முதலிய அலங்காரப்பயிற்சிக்குத்துணியவேண்டும், உனக்காவது உனது சமுதாயத்துக்காவது இன்பமோ, ஊதியமோ அளிக்கக்கூடிய விஷயங்களைமட்டும் நாடுவாயாக. உனக்கு இயற்கைவாசனையில்லாத தொழில்களை ஒருபொழுதும் நினையாதே. உனது நிலைமைக்குஅரியனவான முயற்சிகளிலும் தலையிடாதே. இந்தியர் ஆங்கில வியாசமெழுதுவதிலும் ஆங்கிலக்கவி எழுதுவதிலும் காலம் போக்கல் வீணெண்பதே என் அபிப்பிராயம். சொல்லழகிலும் கருத்தழகே சிறந்ததாகையால்சொல்லலங்காரத்துக்காக

வீண்பாடுபடாதே. பயனற்ற வாதப்பிரதிவாதங்களில் நேரத்தைப்பாழாக்காதே. அவசியமான சரித்திரிகவிஷயங்களை உணரமுயல்வாயாக. நிகழ்காலசரித்திரங்களை அறிவதற்கு உள்நாட்டுவெளிநாட்டு வர்த்தமானப்பத்திரிகைகளில் நலலனவற்றை முறையாகப்படித்துக் கொள்.

(2) **எல்லாம் சிறிதறிவதோடு ஏதேனும் ஒன்றை நன்றயறி.** இது ஒரு முக்கியமான கொள்கை. எலலாவிஷயங்களிலும்ஒரு பொது அறிவைத்தேடிக்கொள். உனக்குஅதிகஇன்பம் விளைப்பதான விஷயத்தைச் செவ்வையாய்க் கற்றுக்கொள். அதற்கவசியமான நூல்களையும் போதனைகளையும் ஆராய்ந்தறி· உன் தொழிலுக்கு உபயோகமான படிப்புகளை ஐயந்திரிபறப்படி. பொருள் வருவாய்க்குரியஞானத்தைமட்டும் தேடவேண்டுமென்று நான்சொல்லவில்லை நீபடும் பாட்டுக்குத் தகுந்த ஊதியத்தையோ இன்பத்தையோ தரக்கூடியனவற்றைக் கற்க முயல வேண்மென்பதே என்கருத்து. அறிவுவளர்ச்சிக்கான விஷயங்களிலெல்லாம் காலம் போக்கல்நல்லதே. அன்றி அறிவைகெடுப்பதற்கான வற்றில் காலம் போக்கல் அறியாமையேயாம்.

## (3) ஜீவிதத்தின் நோக்கங்கள்.

நீங்கள் இல்லறவாழ்க்கையில் புகுந்தருணத்திலிருப்பதால் நீங்கள் செய்யவேண்டியஅல்லது செய்யமுயலவேண்டிய கருமங்களைப்பற்றிய பூரண அறிவு உங்களுக்கு இருக்கவேண்டும் முதனமுதல் காயிக மாநவிகசுகங்களை நீங்கள்அடையவேண்டும் இரண்டாவது உங்களாலியன்றவரை பிறருக்கும் அவைகளை அறிவிக்க வேண்டும் இவைகளைப் பெறுதற்கான மார்க்கங்கள் நல்லறிவும். நன்னெறியுமே. கலாசாலைச்சங்கத்தார் உக்களுக்கு அளித்திருக்கும் யோக்யதாப் பத்திரத்தினால் நீங்கள் அவ்விரண்டும் பெற்றவர்களாகக்கருதப்படுகிறீர்கள். சுயபயர்ச்சியால் இன்னும் அவைகளை வளரச் செய்யுங்கள். உங்களால் இயன்றமட்டும் ஜனங்களுக்கிடையிலும் அவற்றைப்பரவச்செய்யுங்கள். ஜிவிதத்தின் ஒவ்வொரு நோக்கங்களைப்பற்றியும விரிவாகப் பேசத்துணிந்தால் வருஷமுழுதும் பேசலாம். அதற்கு சமயமின்மையால் பொதுவான சிலவிஷயங்களைமட்டும் நான்சொல்லுகிறேன்.

## (4) ஆரோக்யம்.

எல்லா இன்பங்களுக்கும் காரணம் ஆரோக்கியமே. ஆரோக்கியத்துக்கவசியமானமுறைகளைக்கற்றிவதோடு கற்றபடியே அநுஷ்டிக்கவும் வேண்டும். சுகாதாரமுறைகளைஜனங்களுக்குப்போதித்து ஜனசமூகத்தின் ஆரோக்கியத்தையும் பேணுங்கள். சுகாதாரமுறைகளை இளமையிலேயேகற்று அநுஷ்டிக்கவேண்டும். வயதுமுதிர்ந்து நோயாளியானபின் படிக்கமுயல்வதினால ஒரு பயனுமிலலை. எவ்வளவுக்கு சுகசரீரிகளாகவும் தீர்க்காயுசுடையவர்களாகவும் இருக்கிறீர்களோ அவ்வளவுக்கு நீங்கள்படித்தபடிப்பின்வயனை அடைந்தவராவீர்கள்.

## நாகப்பூச்சி அல்லது நாங்கில்புழு.

———(:0:)———

பொதுக்குறிப்பு:—நாகப்பூச்சியானது மெலிதாய் நீண்டிருக்கும் உறுப்புடைய ஒரு பிராணி. இது அட்டை செவிட்டுப் பாம்பு முதலியனவற்றின் இனத்தைச் சேர்ந்தது. இதற்கு நிலப்புழுஎன்றும் நிலவேர் என்றும் மறு பெயர்கள் உண்டு. இது பெருபாலும் ஈரமான ஸ்தலங்களிலும் வயல்களிலும் காணப்படுகிறது. பார்வைக்கு மிகவும் அருவருப்பான ஜெந்துவாயிருந்தாலும் மிகவும் பிரயோஜனமுள்ளது. ஈரமான ஸ்தலத்தில் மண்வெட்டியால் வெட்டினால் அது வெளிப்படுகின்றது. இந்தப்புழுவானது ஏகதேசம் எல்லாத்தேசங்களிலும் எந்த விதமான தேச சுவாத்தியம் உள்ள இடங்களிலும் காணப்படுகின்றது. நகரும்போது இதன் தேகத்தின் பருமன் வித்தியாசப்படும்.

### சுபாவம் அல்லது பழக்கம்.

இந்தப்பிராணி பார்வைக்கு அற்பமாயும் அவலட்சணமாயும் இருந்தாலும் இதன் சுபாவங்களைக் கவனித்தால் ஆச்சரியமும் முக்கியமுமான ஒரு பிராணியென்று நாம் அறியலாம். இது வளைக்குள் இருக்கும் சமயத்தில் தனது வாலைத் துவாரத்தின் வெளிப்புறத்திலும் தலையை உட்புறத்திலும் வைத்துக்கொண்டிருக்கும். ஏதாவது அரவம் கேட்கும்போது வாலை உள்ளே இழுத்துக்கொள்ளும். வளையானது உட்பக்கம் மிருதுவாயும், மேற்புறத்தைவிட விசாலமாயும் இருக்கும். இலேசாய் எல்லாப் பக்கங்களிலும் திரும்பவும் நடமாடவும் தக்கபடி வளையின் கீழ்ப்பாகம் பெரியதாயும், மேற்பாகம் சிறியதாயும் இருக்கிறது. ஈரமான ஸ்தலங்களில் மண்ணை இலேசாய் இளக்கிக்கொண்டு உள்ளே செல்லும். கடினமான ஸ்தலங்களில் அதன் வாயிலிருந்து உற்பத்தியாகும் ஒருவித மழமழப்பான தண்ணீரைவிட்டுத் தரையை நனைத்துத் தோண்டிக்கொண்டு பூமிக்குட்செல்லும். இப்படிச்செய்யும் போது அது மண்ணை அதிகமாய் விழுங்குகின்றது. இது பகலைப்பார்க்கிலும் இரவில் அதிகமாய் நடமாடுகிறது. இதற்குக் கண்கள் இல்லாவிட்டாலும் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியும். இதைத் துவாரத்திலிருந்து இழுத்தால் தன்பிடியை இலேசில் விடாது. பலமாய் இழுத்தால் இரண்டு துண்டாய் அற்றாலும் அற்றுப்போகும். இதை இரண்டாய் வெட்டினாலும் பெரும்பாலும் சாகிறதில்லை. இந்த ஆச்சரியமான புழு நல்ல சத்தியுடையதாயிருந்தால் வெட்டுண்ட துண்டுகளிரண்டும் வெவ்வேறாக இரண்டு புழுக்கள் ஆகின்றன.

## உடம்பு.

இது பிரகாசமாயும் குழல்போன்றுமிருக்கும். உடம்பு அநேக வளையங்களால் அல்லது முட்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இதன் தேகத்தில் ஏகதேசம் 150 வளையங்கள் இருக்கின்றன. இதற்கு எலும்புகளும் மூளையும் இல்லை. சரீரம் நீளமாயும், நுட்பமாயும், உருண்டைவடிவமான குழாய்களால் இணைக்கப்பட்டதாயுமிருக்கிறது. இந்தக்குழாய்களின் மத்தியில்மிகவும் ஒடுக்கமான ஒருகுழாய் உண்டு இந்தக்குழாய் இருபக்கமும் திறந்திருக்கும். வெளிநுனியானது நகரவும் பரிச உணர்ச்சிகளை அறியவும் உபயோகமாகிறது. இதற்குப் பாதங்கள் இல்லையாயினும் ஒவ்வொரு வளையத்திலும் கண்ணுக்குத்தெரியாத மிகச்சிறிய கொக்கிகளுண்டு. இந்தக்கொக்கிகளின் உதவியால் தான் இந்தப்பிராணியானது நகரவும் மண்ணை உறுதியாகப் பற்றிக்கொள்ளவும் செய்கிறது.

நாகப்பூச்சிக்கு ஐம்புலன்களுமில்லை. ஆனால் பரிசன உணர்ச்சியும் சுவையுமுண்டு. வெகு தூரத்திற்கப்பால் மிதிக்கப்படும் மிதியையும், காற்றின் அசைவையும், தன் பரிச உணர்ச்சியால் அறிந்துகொள்ளும். தலையானது அதன் உடம்பின் வளையத்தில் இருக்கின்றது. அந்த வளையத்தின் மேல்பாகத்தில் ஒரு சிறு சதையானது தொங்குகின்றது. இந்தச்சதையின் உதவியினாலும் வளையத்தின் கீழ்பாகத்தின் உதவியினாலும் தன் இரையாகிய அழுகின இலையைப்பிடித்து உறிஞ்சிவிடுகிறது. இலையை உறிஞ்சுமுன் தன் வாயினின்று உற்பத்தியாகும் ஒருவித மழமழப்பான தண்ணீரினால் அந்த இலையை நனைக்கிறது. இலைகளை உறிஞ்சும்போது இதன் தலைப்பாகமானது மற்றப்பாகங்களை விடப் பருமனாகும். இப்படிப் பொதுவாக 32 வளையம் முதல் 37 வளையம் வரைப் பருமனாகும். இதற்குச் செவிகள் இல்லை. ஆனால் தன் பரிச உணர்ச்சி கூர்மையாயிருப்பதால் சிறு அரவத்தையுங்கூட இலேசாய் அறிந்துகொள்ளுகின்றது.

## முட்டைகள்.

இந்தப்பிராணியின் 14-ம் வளையத்தில் 2 சிறு துவாரங்கள் இருக்கின்றன. இதன் வழியாகத்தான் முட்டைகள் வெளிப்படுகின்றன. முட்டைகள் ஆரம்பத்தில், இந்தப்பிராணியின் பருமனாயிருக்கிற பாகத்தில் (அதாவது 32-ம் வளையம் முதல் 37-ம் வளையம்மட்டும்) உற்பத்

த்தியாகின்றன. இந்த முட்டைகள் இந்தப் பாகத்திலிருந்து உண்டா கிற ஒரு கூட்டுக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கூட்டுக்குள் கட்டியான பசையுள்ள ஒருவித ஜலம் இருக்கிறது. இந்தப் பசைபோன்ற சத்தைத்தான் ஆரம்பத்தில் குஞ்சுகள் ஆகாரமாகக் கொள்ளும். காலம் செல்லச்செல்ல முட்டைக்குள் இருக்கும் குஞ்சுகள் பின்னுக்கு இழுப்பதால் இந்தத் துவாரத்தின் வழியாய் குஞ்சுகள் வெளிப்படுகின்றன.

## ஆகாரம்.

இந்தப்பூச்சி விழுங்குகிற மண்ணில் அழுகிப்போன செடிகளின் சிறு துண்டுகள் இருக்கும். அந்தச்சிறு துண்டுகளை அது தின்று ஜீவிக்கிறது. மண்ணின் மற்றப்பாகங்களெல்லாம் தேகத்தைவிட்டு வெளிப்படுகின்றன. இந்தப் பூச்சியானது புல்லின் சிறு இலைகளையும் பயிர்களின் இலைகளையும் சாப்பிடுகின்றது.

## பிரயோஜனம்.

மழை பெய்த மறுநாட்காலையில் நாம் வயலைப்போய்ப் பார்த்தால் அங்கே மண்குவிந்திருப்பதைப் பார்க்கலாம். இதெல்லாம் நாகப்பூச்சியின் உடம்பிலிருந்து வெளிப்பட்டமண்ணே. இந்தப்பூச்சிகள் மண்ணை நெருக்கித்தள்ளி தங்களுக்கு வளைகள் செய்துகொள்ளுகின்றன. இப்புழுக்கள் பிரவேசிக்கிற இடங்களிலெல்லாம் காற்றும் மழைத்தண்ணீரும் இலேசாய்ப் பூமிக்குள் செல்லுகின்றன. இப்படிச்செல்வதினால் காற்றும் மழையும் மண்ணின் இயற்கை சுபாவத்தை மாற்றிவிடுகின்றன. இதனால் செடிகள் மண்ணிலுள்ள சத்தை செம்மையாய் கிரகித்து செழிப்பாய் வளருகின்றன. டார்வின் என்னும் பெரிய சாஸ்திரி ஒரு எக்கர் நிலத்தில் 50,000 புழுக்களுக்குமேல் இருப்பதாகவும், அவை ஒரு எக்கரில் 10 டன் மண்ணை வெளியாக்குகின்றன என்றும் எழுதியிருக்கிறார்.

நாகப்புழு குழந்தைகளுக்கு உண்டாகிற குத்திருமல் முதலிய வியாதிகளுக்கு நல்ல மருந்து.

## பத்திரிகை வாசிப்பதனால் உண்டாகும் பயன்.

———(:o:)———

1. "தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு" என்னும் மேலோர்வாக்கியப்படி கல்விகேள்விகளினாலும் பலதேசவர்த்தமானங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும் பத்திரிகையானது தினந்தோறும் தன்னை வாசித்து வருபவர்களுக்கு இலௌகிக ஞானத்தையும், வைதீக ஞானத்தையும் ஆற்றின் ஊற்றைப் போல அழகாய் உற்பத்திசெய்கிறது.

2. இகலோக சுகத்தையும், பரலோக சுகத்தையும் மக்கள் அடைவதற்குச்சாக்ஷாத்சாதனம் கல்வியேயென்று, பத்திரிகையானது கல்வியின் சிறப்பைக் கற்றோர் வாக்கினால் அனைவர்க்கும் காட்டி அவர்களைக் கல்விச்செல்வமுடைய கனவான்களாகவும், பொருட்செல்வமுடைய புண்ணியவான்களாகவும், அருட்செல்வமுடைய அரியஞானவான்களாகவும் செய்கிறது.

3. அன்னமானது பாலையும் நீரையும் வேறு பிரிப்பதுபோலவும் தேற்றாம்பொடியானது கலங்கினநீரைத்தெளிவாக்குவதுபோலவும் பத்திரிகையானது மக்களுக்கவசியம் வேண்டியதாகிய சத்தியம், சாந்தம், சீலம், கருணை புண்ணியம் ஒழுக்கம் பக்தி, ஞானம் முதலிய உத்தம குணங்களின்னதென்பதையும், கொலை, களவு, கள், காமம், பொய், பித்தலாட்டம், மாய்மாலம் வஞ்சனை, வம்புதும்பு, வல்லடிவழக்கு, கோள், குண்டுணித்தனம் முதலிய அதமகுணங்களின்னவையென்பதையும், அனைவரும் அநாயாசமாகப் பகுத்தறிந்துகொண்டு தள்ளவேண்டிய துர்க்குணங்களைத்தள்ளி, கொள்ளவேண்டிய சற்குணங்களைச் சந்தோஷமாகக் கொள்ளும்படி செய்கிறது.

4. காடு முரடாயிருக்கிற கரம்புநிலத்தை ஏர்பூட்டியுழுது பயிர்செய்வதற்குச் சாதனமாக்கிக்கொள்வதுபோலப் பத்திரிகையானது கொஞ்சமேனும் நெஞ்சிரக்கமின்றிப் பஞ்சமாபாதகம்புரியும் நெஞ்சத்தவர்களையும் நாளடைவில் பற்பல நீதிகளைப்போதித்து அவர்கள் அப்பாவத்துக்கஞ்சி அவற்றை விட்டுவிடும்படியாகவும், புண்ணியகர்மத்தைத் தொடும்படியாகவும், அதனால் ஆண்டவனது அருட்கண் படும்படியாகவும், செய்கிறது.

5. தந்தைதாய் வாக்கிய பரிபாலனஞ்செய்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைப்போலவும், தமையனார்வாக்கிய பரிபாலனஞ்செய்த தருமராஜருக்கிளைய சகோதரர்கள்போலவும், பத்திரிகையானது தன்னை யன்போடு வாசிப்பவர்களைத் தாய் தந்தையர்களிடத்தும் தமையன் மார்களிடத்தும், குருதெய்வங்களிடத்தும், அரசர்களிடத்தும், மிகுந்த அடக்கத்தையும், பக்தியையும், போதனைசெய்து முக்தியைபடையும்படி செய்கிறது.

6. பொருளில்லார்க்குப் பூவுலக மில்லை யென்று முதியோர் மொழிந்துள்ளபடியால் அப்பொருளைச் சம்பாதிக்குங் காலத்தில் பழிபாவமணுகாமல் நன்மார்க்கத்திலேயே சம்பாதிக்கவும், அங்ஙனஞ் சம்பாதித்தபொருளைத் துர்விஷயங்களில் செலவிடாது சற்பாத்திரத்தில் செலவிட்டு அதனால்தருமார்த்த காம மோக்ஷமென்னும் புருஷார்த்தங்களைப் புருஷர்கள் பெறவும், பத்திரிகையானது அடிக்கடி அன்போடு போதிக்கிறது.

7. தினந்தோறும் மண்சாம்பல் முதலியவைகளைத் தின்று வியாதியினால் மெலியும் குழந்தைகளுக்குத் தாயானவள் மருந்தை மதுரமான பலகாரத்தில் மறைத்துக்கொடுப்பதுபோல, கொலை களவு முதலிய கொடும் பாவத்தைச்செய்து அதனால் நிலைதவறித் துன்பமடையும் நெஞ்சுக்குப் பத்திரிகையானது, அப்பாவங்களைப் பஸ்மமாக்கும் பரம பக்தியையும், ஞானத்தையும் பற்பலவிதமான நீதிகளிலும் நியாயங்களிலும் நிர்மலமான இதிகாசங்களிலும் நிறைத்துத்போதித்து நிலையாக்கி நித்தியமான இன்பத்தைத்தருகிறது.

8. திகுதிகுவென்று எரிந்துகொண்டிருக்கிற அக்கினியை ஜலமானது எப்படி உபசாந்திப்படுத்துமோ அப்படிபெண்டுபிள்ளை பண்டபதார்த்தங்களில் பேய்போலத்திரிந்து பெருந்துயர்கொண்டு காமக்குரோதமென்னுங் கடுங்கனலால்வேகும் நமது மனத்தைப் பத்திரிகையானது அக்காமக்குரோதங்களை அளவு மீறவொட்டாது அடக்கும் நாநாவுபாயங்களை நல்லோர் வாக்கினால் நவநவமாய் எடுத்துப்புகட்டி நல்ல குளிர்ந்த ஜலம்போலவும், பூர்ணசந்திரன்போலவும், பொற்பிரகாசம் போலவும் பொலிந்து விளங்கும்படி செய்கிறது.

9. பலதேசவர்த்தமானங்களினாலும் ஆங்காங்குள்ள பெரியோர்களாகிய பண்டிதசிகாமணிகளின் பரம காருண்ணியமான உத்தமவியா

சங்களினுலும், அவ்வியாசங்களிலமைந்துள்ள அநந்தவிதமான அரிய விஷயங்களென்னும் இரத்தினங்களினுலும் பத்திரிகையானது தன்னை யலங்கரித்துகொண்டு ஊரின் மத்தியிலிருக்கும் ஜலம்நிறைந்த தாமரைத் தடாகம்போலப் படிப்பவருக்கும் கேட்பவருக்கும் அக்கணமே அந்தக் காணத்தில் குளிர்ச்சியையும், அழகான அறிவையும் அருமையான ஆநந்தத்தையும் அன்போடளிக்கின்றது.

10. பற்பல வாய்ப் பகர்வதென்ன! பத்திரிகையின் அபிவிர்த்தியினுலேயே தற்காலம் பலதேசங்கள் நல்ல நாகரீகமும், ஒழுக்கமும், பக்தியும், ஞானமும் ஒருங்கேபெற்று உன்னதமாய் விளங்குகின்றன. ஆதலின் எண்ணரிய பிறவிகளில் உயர்ந்த மக்களாய்ப் பிறந்த நாமெல்லோரும் இவ் வருமையான பிறவியில் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாவதற்கும் அக்கல்விக்கேள்வியின் பயனுகிய அறம், பொருள், இன்பம் வீடென்னும் புருஷார்த்தங்களைப்பெறுதற்கும், பிரஸ்தானத் திரயங்களை விரித்துப் புருஷார்த்த வடிவமாகப்புறப்பட்டுலாவும் உத்தம பத்திரிகைகளைப் பத்தியுடன் வாசித்து நித்தியஞ்சிந்தித்தல் நியாயமான சாதனமாம். (சுகாபி விருத்தினி)

———(:o:)———

## காகமும் தவளையும்.

(ஒரு சிறு கதை.)

ஒரு சிறு தடாகத்திலுள்ள ஒரு தவளை ஒருநாள் காலையில் ஜலத்தைவிட்டுக் குதித்துக் கரையில் வந்து வெயில் காய்ந்துகொண்டிருந்தது. அப்போது திடீரென ஒரு காகம் வந்து அத் தவளையைக்கௌவிக்கொண்டு ஒரு பெரிய ஆலமரத்தின் கிளையொன்றிற் சென்று உட்கார்ந்தது. தவளை ஆலமரத்தைக்காணவே வெகு சந்தோஷத்துடன் "க்ரோ, க்ரோ, க்ரோ" எனக்கூப்பிடத்தொடங்கிற்று.

காகம்:— "இவ்வளவு உத்ஸாஹத்திற்குக் காரணம் என்ன? உன்னை யான் உண்பது உனக்குக்கொண்டாட்டம் தானே?"

தவளை:— "கொண்டாட்டமல்ல. நீர் இங்கிருந்து என்னைக்கொன்றுதின்றுவிட்டபிறகு என்னபாடு படப்போகிறீரோ என்று நினைக்கும்போது எனக்கு நகைப்புவராமலிருக்கச்சற்றும் நிவர்த்தியில்லை. இதில் என் மாமனுர் வசிக்கிறுர். அவர் உம்மைப்பார்க்கிலும்மிகப்பெரிய

வர். உம்மிலும் எத்தனையோ மடங்கு பலமுள்ளவர். என்னை நீர் கொன்று தின்பீராயின் அவர் உம்மைஇலே சாக விட்டுவிடமாட்டார். உமது குடலைப்பிடுங்கி மாலை யிடுவார். சந்தேகம் இல்லை. இதை யறியாமல் இவ்விடத்தில் வந்து உட்கார்ந்தீரே என்றுதான் நான் நகைத்தது."

காகம் இதைக்கேட்டு நடுநடுங்கி தவளையை எடுத்துக்கொண்டு அங்கிருந்து பறந்து ஒரு அரசமரத்தில் சென்றிருந்தது. அரசமரம் எதிர்படவே தவளை முன்னிலும் பதின்மடங்கதிகமாகச் சத்தமிட்டு நகைக்கத் தொடங்கிற்று.

காகம்:—" தவளையே! என்ன காரணம்? ஏன் இப்படி நகைக்கிறாய்?"

தவளை:—" வேறொன்றுமல்ல. பூனைக்குப் பயந்து புலிக்கூட்டில் வந்து ஒளித்ததுபோல் ஆச்சுது உமதுபாடு. இதுதான் என் தகப்பனார்வீடு. இவர் என்மாமனாரைப்பார்க்கிலும் மிகுபலசாலி. எதற்கும் அஞ்சாதவர். உம்மைக் கண்டால் ஒன்றாகத்தூக்கிவிழுங்கிஏப்பம்மிட்டுவிடுவார் தடையேயில்லை."

இத்தனையும் கேட்கவே காகத்தின் நெஞ்சம் கலங்கிவிட்டது. "தவளைக்கு உறவினர்கள் எங்கெல்லாமிருக்கிறார்களப்பா! வாய்க் கெட்டியது வயிற்றுக்கெட்டாமல் போய்விடுமோ? யாதோ? தெரியவில்லையே! இனிஎவ்விடம் சென்றிருந்து இத்தவளையைக்கொன்று புசிக்கலாம்" என்று யோசனைசெய்துகொண்டு நாற்புறமும் பார்த்தபொழுது சிறிது தூரத்துக்கப்பால் ஒரு கிணறு அக்காகத்தின் கண்களுக்குப் புலப்பட்டது. உடன் தானே அது தவளையைத் தன் அலகில் எடுத்துக்கொண்டு அக்கிணற்றைநோக்கிப் பறந்து போயிற்று. அவ்வாறுசென்று கிணற்றருகில் இருந்தபொழுது தவளை காகத்தைப்பார்த்து "காகமே! இனி நான் இறக்கவேண்டியதுதான். இங்கு எனக்கு உற்றபந்துக்கள் ஒருவருமில்லை. நீர் என்மீது கருணைகொண்டு எனக்கு ஒரு உபகாரம் மட்டும் செய்ய வேண்டும். உமதலகு மிகமொட்டையாகவிருக்கிறது. அதைக் கொண்டு கொத்தி என்னை சித்திரவதை செய்துவிடாதேயும்,

தயவுசெய்து அதை இந்தக்கல்லில் தீட்டிக் கூர்மைப்படுத்திக் கொண்டு ஒரே கொத்தாய் கொத்திக்கொன்றுவிடும். அப்படிச் செய்தால் உமக்குக் கோடி கோடிப் புண்ணியமுண்டு.'' என்று பல வாறாகக்கூறிக் காகத்தினிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. காகமும் அதற்கு உடன்பட்டு தவளையைக் கிணற்றின் ஓரத்தில் வைத்து விட்டு அங்கிருந்த கல்லில் தன் அலகை மாறி மாறித் தீட்ட ஆரம்பித்தது. தவளையோ அதற்குள் தப்பினேம், பிழைத்தோம்'' என்று ஒரே குதியாகக் கிணற்றுக்குள் குதித்துவிட்டது. காகம் அலகை கூர்மையாக்கிக்கொண்டு தவளையைப்பார்க்கும்போது அதை அங்கெங்கும் காணவில்லை. பிறகு கிணற்றுக்குள் நோக்க, தவளை அங்கு ஜலத்தில் நீந்திக்கொண்டிருந்தது. தவளை காகத்தைக்கண்டு'' காகமே! நான் என்னசெய்யட்டும். தவறிக்கிணற்றுக்குள் விழுந்துவிட்டேன். இனி அங்கு ஏறிவர வேண்டுமானாலும் எனக்கு முடியாது. நீர் என் காலைக் கௌவிக் கௌவி புண்படுத்தி என்னை நொண்டியாக்கிவிட்டீர். என் காலமுழுவதும் இனி இந்தக்கிணற்றுக்குள் கிடந்துதான் கழிக்கவேண்டியதாக நேரிட்டிருக்கிறது'' என்று சொல்லிவிட்டுத் தலையை ஜலத்தில் இழுத்துக்கொண்டது. காகம் ஏமாந்து திரும்பிப் போயிற்று.

படிப்பினை.

புத்தியுள்ளவன் எந்த ஆபத்திலிருந்தும் தப்பிப்பிழைத்துக்கொள்வான்.

புத்தியில்லாதவன் கையிலுள்ளதையும் இழந்துவிட்டு ஏமாந்து நிற்பான்.

S. D. P.

——(.o:)——

## தமிழர்களின் தற்கால நிலைமை.

### 1

இந்நாட்டாரை மலையாளர் தமிழர் என இரண்டு பெரும்பிரிவாகப் பிரிக்கலாம். மலையாளருள், பிராமணர், நாயர், தீயர், கிறிஸ்தவர், மகமதியர் என நான்கு உட்பிரிவுகள் இருப்பனபோலவே தமிழர்களுக்குள்ளும் பிராமணர், திராவிடர், கிறிஸ்தவர், மகமதியர் என நான்கு உட்பிரிவுகள் இருக்கின்றன. தமிழ் மொழியைத் தாய்ப் பாஷையாகவுடைய இந்நான்கு பிரிவினருடையவும், நன்மை நாடுவதே நம் தமிழனது தலைமையான நோக்கம் எனினும் இந்நான்கு வகுப்பினரது சமுதாய நிலைமைகளும் ஆசாராநுஷ்டானங்களும் பெரிதும் தம்முள் வேற்றுமை உடையனவாயிருப்பதால் ஒவ்வொருவர் நிலைமையையும் தனித்தனி ஆராய்வதே முறைமையாகும்.

அவ்வாறு ஆராயத்தொடங்குங்கால் இந்நான்கு வகுப்பினருள்ளும் திராவிடர்களே மிகக் கேவலமான நிலைமையிலிருப்பதால் அன்னோர் பாட்டைமட்டும் முதன்முதல் ஆராயத் தொடங்குவோம்.

இத்திராவிடர்கள் வேளாளர், தட்டார், தச்சர், கொல்லர், பாணர், சாலியர், வாணியர், செட்டிகள், இடையர், மறவர், நாவிதர், வண்ணார் எனப்பலபிரிவினராய் இருக்கிறார்கள். இவர்கள் நிலைமையெல்லாம் பொது நோக்காகப் பார்க்குமிடத்து ஒரே அளவினதாகக் காணப்படினும் சிற்சில விஷயங்களில் வேளாளரே தலைமை ஸ்தானமுடையாராக விளங்குகின்றனர்.

ஒரு சமுதாயத்தின் நிலைமையைச் சீர்தூக்கியறிவதற்குக் கல்வியினும் சிறந்த அளவுகோல் வேறொன்றுமில்லை. கல்வியில்லார் வேறெவையுடையாராயினும் சிறப்புடையாரல்லர்.

நமது திராவிடர்கள் கல்வி விஷயத்தில் எவ்வளவு அபிவிர்த்தியடைந்திருக்கிறார்கள் என நோக்கத் துணியும்போது நம் மனம் திகிலடைகின்றது. சுமார் 2—லக்ஷம் திராவிடர்கள் இந்நாட்டிலிருந்தும் 100—க்கு 10 பெயராவது சாமானியக் கல்விப் பயிற்சியுடையவராகக் காணவில்லை. நாடெங்கும் ஆங்கிலப் பயிற்சி மிகுந்த இக்காலத்திலும் இவ்விரண்டு லக்ஷம் பெயருள் நாமறிந்தமட்டும் B. L. பட்டதாரிகள்

மூவர். B. A. பட்டதாரிகள் 15. L. M. S. 2. இவர்களை பலஉட் பிரிவுகளிலும் சேர்த்துப் பங்கு வைக்கும்போது அநேக பிரிவினர் பங்கு பெறும் பாக்கியமில்லாது ஏமாந்து போக நேரும். மேலே கூறிய வகுப்பினருள் தட்டார், தச்சர், கொல்லர், நாவிதர், வண்ணார் முதலியோருள் கலாசாலைப் பட்டதாரிகள் இல்லாதிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. இவ்வைவருள் கடைப்பிரிவினர் இருவரும் அவ்வளவு செல்வமுடையவர் அல்லவாகலின் அவரைக்குறை கூறுவது சரிபாகாது. மற்றமூவினத்தாரும் அதத்தகையரல்ல. அவர்களில் சிறு பான்மையோர் ஆங்கிலக் கல்விப் பயிற்சிக்குப் போதுமான செல்வ முடையவர்களே. ஆனால் அவர்கள் காலோசிதமான சீர்திருத்தங்களைச் செய்யமுயலாமல் வீண்பரிஷ்காரங்களில் தலையிட்டிருப்பதினாலேயே ஆங்கிலப் பயிற்சியில்லாக் குறைபாடு அவர்களைச் சார்ந்திருக்கிறது. அவ்வீண் பரிஷ்காரங்களை விளக்குமிடமிதுவன்று. சமுதாய நிலைமை யைக்குறித்து ஆலோசிக்கும்போது அவைகளை விரிவாகக் கூறுவோம்.

வேளாளர்களுக்குள் சில கலாசாலைப் பட்டதாரிகளிருப்பது மெச் சத்தக்கதே ஆயினும் அவர்களுடைய மொத்தத்தொகையைப் பார்க்கு மிடத்து 100-க்கு ஒருவராவது இல்லாதிருப்பது மிகக்கேவலமானதே. இவர்களில் பெரும்பான்மையோர் வசிப்பது நாஞ்சினாடு. அதன் மத் திய ஸ்தானமாகிய நாகர்கோவிலிலும் கோட்டாற்றிலும் ஆங்கிலக் கல்விச் சாலைகள் இருந்தும் வேளாளச் சிறுவர்களுக்கு ஆங்கு இடமில் லாதாயினமை வெகு விநோதமே. பண்டைக் காலந்தொட்டே பல வகையானும் திராவிடர்களுள் தலைமையான ஸ்தானமுடையராகவிருந்த இவர்கள் கல்வியில்லாக்குறையால் தம் பூர்வ நிலையிழந்து நாளுக்குநாள் கீழ்நோக்கிச் செல்வது எவ்வளவு இழிவானது. ஒருவனுக்குச் சிறப் புண்டாவது குணம்பற்றியே யன்றி குலம்பற்றி யன்று. "குலத்தளவே யாகும் குணமென்னும்" முதுமொழியிருந்தாலும், உவர் நிலமும் பண் படுத்தின் நன்னிலமாவதுபோல பயிற்சியினால் எக்குலத்தாருக்கும் நற்குணத்தாராக முடியும். பசும் பொன்னும் கைபழகாதிருக்கின் மாசடையும்; கைபழகின் இரும்பும் ஒளியுறும். உ காரணமாக, வெகுநா ளாய்க் கும்பிக்குக்கூழும் குடியிருக்கவீடும் உடுக்கத்துணியுமற்றுவிலங்க ளையாய். வேளாளர்களின் அடிமைகளாயிருந்து காலந்தள்ளின பள்ளர் பறையர் முதலியோர் ஐரோப்பியப் பாதிரிமாரின் நல்லுழைப்பினால் கலாசாலைப் பட்டங்கள் பெற்று, டாக்டர்களாகவும், வக்கீல்களாகவும், ஆசிரியர்களாகவும், மற்றும் துரைத்தன உத்தியோகஸ்தர்களாகவும்,

பெரும்புகழோடு காலந்தள்ளுவதைக் கண்கூடாகக் காணகின்றோமே. மேற்குலத்தவரென நடிக்கும் வேளாளர்கள் கல்வி விஷயத்தில் அபிவிர்த்தியடைய முயலாமல் பேய்க்கொடை கொடுப்பதும், கிரிமினல் சிவில் வழக்குத்தொடுப்பதும் ஓய்வுநேரம் கிடைத்தால் வேட்டையாடுவதும், போதுமென வெண்ணிக் காலம் போக்கினால் பின் விளையும் வினைகள் பலவுள. அவைகளை ஒவ்வொன்றாய் விளக்கி நேரம் போக்குவதைவிட பிள்ளைமாரும் பறையர் பள்ளரும் பரஸ்பரம் ஸ்தானம் மாற்றிக் கொள்ள வேண்டியதாக நேருமென்று மட்டுமே சுருக்கமாகக் கூறுவோம்.

இனி, சாலியர், பாணர், வாணியர், செட்டிகள் ஆகிய மற்றத் திராவிடர்கள் நிலைமையைக் கவனிப்போம். இவர்களுள் கலாசாலைப் பட்டதாரிகள் தொகை சிறிதாகவிருந்தாலும் அவர்களது ஜனத்தொகையையும் மற்றும் சௌகரியங்களையும் கவனிக்கும்போது இவர்கள் மற்றெல்லாரையும்விட மிக முயற்சியுடையவர்களென்றுதான் சொல்லவேண்டியதாகின்றது.

இதுகாறும் திராவிடர்களாகிய தமிழர்களின் ஆங்கிலப்பயிற்சியைப் பற்றிப் பொதுவாக ஆராய்ந்தோம். இனி, இவர்கள் தாய்ப்பாஷையாகிய தமிழில் எவ்வளவு தேர்ச்சியடைந்திருக்கிறார்கள் என்று பார்ப்போம். இவ்விஷயத்தைப்பற்றி நோக்கப் புகும்போது நமது மனத்துண்டாகும் உணர்ச்சிகள் அனைத்தையும் இங்கெழுதத் துணியின் அநேகருக்கு மனவருத்தம் உண்டாகக்கூடும். ஏனெனில் தமிழ்ப் பயிற்சியில் நம்மவர் நிலைமை அவ்வளவு கேவலமாக இருக்கிறது. தமிழர்களாகிய கிறிஸ்தவர்களும், மலையாளரும் தத்தம் தாய்ப் பாஷையிலடைந்திருக்கும் அபிவிர்த்தியையும் நம்மவர்கள் தாய்ப் பாஷையிலடைந்திருக்கும் வளர்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நம்மவர்பாடு நகைக்கத் தக்கதாகவேயிருக்கிறது. ஐரோப்பியப்பாதிரிமாரின் நல்லுழைப்பினால் நாகரீகமடைந்த பள்ளர் பறையர் சான்றோர் முதலிய இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவப்பெண்களைப்போல் செவ்வையாக ஒரு கடிதமெழுதத் தக்க புருஷர்கள் நம்மவர்களில் 100–க்கு 5 பெயராவது இருப்பரோ என்பது சந்தேக விஷயமே. நம்நாட்டு மலையாளப்பத்திரிகைகளில் விதுஷிகளான மாதர்களின் இறகுப்பிறப்பான விஷயங்கள் பலவற்றை செய்யுள் நடையிலும் வசனநடையிலும் பார்க்கலாம். அத்தகைய பயிற்சியுடையவர்கள் நம்மவருள் அநேகமாக மிகச்சொற்பமென்றே சொல்லவேண்டும். தாய்ப் பாஷையில் தேர்ச்சியடையாத ஜாதியாரை நாகரீகமடைந்தவர்களாக எண்ணலாமா? நமது ஸ்ரீமூலம் பிரஜா சபையில் மெம்பர்களாய்

வருவதற்காக அநேகர் ஆத்திரப்படுகிறார்கள். ஜனப் பிரதிநிதிகளாய் வரும் இவர்களாவது தமிழ்ப் பாஷையைப்பற்றிக் கவனிப்பதுண்டா ? ஆண்டுக்கொருமுறை மெம்பர் வேஷங்கட்டி பிரஜாசபையரங்கிலேறி இரண்டொரு ஆட்டமாடி நிருத்துவதுடன் அவர்களுடைய பொறுப்பு நின்றுவிட்டதென எண்ணுவார்களாயின் அவர்கள் உண்மையான ஜனப் பிரதிநிதிகளல்லர். ஜனப் பிரதிநிதிகளின் கடமைகள் பலவுள. இங்கிலாந்து பிரான்சு முதலிய மேற்றிசை நாட்டுப் பிரதிநிதிகளின் ஜீவித சரித்திரங்களை வாசித்துப் பார்த்தால் அத்தகைய பிரதிநிதிகள் நமது நாட்டிலுண்டாக இன்னும் ஒரு நூறோ இருநூறோ வருஷமாகும் என்றே சொல்லவேண்டும். தமிழர்களின் பிரதிநிதியாய் வந்த ஒருவர் பிரஜாசபையில் வாசிப்பதற்காகக் கொண்டு வந்த ஒரு வியாசத்தை ஒருமுறை நமக்கு வாசிக்கும்படி நேர்ந்தது. அதன் தமிழ்நடையைப் பார்த்தபொழுது அதைப்பிரஜாசபையில்வாசித்துநம்மவர்களது தாய்ப் பாஷைப் பயிற்சியின்மையை யாவருமறிய விளக்கிக்காட்டுவதிலும் பிரஜாசபையில் தமிழர்களுக்கு மெம்பர் ஸ்தானம் இல்லாதிருந்தாலும் அவ்வளவு நஷ்டமாகாதென்ற உணர்ச்சி நமக்குண்டாயிற்று. ராஜபாஷையான மலையாளத்திலாவது சாமானியப் பயிற்சியுண்டா? அதுவுமில்லை. நாஞ்சி நாட்டார் மலையாளம் அவர்களது தமிழைக்காட்டிலும் மிகக்கேவலமானதாகவே இருக்கிறது. அன்னநடைகற்கப்புகுந்த காகத்தைத்போல் இவர்கள் மலையாளத்தில் தேற்சியடையாமலும் தன் தாய்ப் பாஷாவை வருந்திப்பயிலாமலும் நாளுக்கு நாள் கெட்டுவருகிறார்கள். செவ்வையாகப் பேசவும் எழுதவும் தெரியாதவர்களது வாயும் கையும் ஊனமுடையனவென்றே கூறவேண்டும்.

விரிக்கிற் பெருகும். அடுத்தமுறை, விவசாயம் கைத்தொழில் வர்த்தகம் முதலியவற்றில் நம் நாட்டுத்தமிழர்கள் அடைந்திருக்கும் நிலைமையை ஆராய்வோம்.

பத்திராதிபர்.

## ஒரு சந்தேகம்.

——(:o:)——

வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்—புள்ளோடு
வண்டிரியச் செல்லு மணிநீர்க கலிங்கர் கோன்
தண்டெரியற் றேர் வேந்தன் றான்.

என்னும் வெண்பாவில் "கள் வார்ந்த தாமரை" யெனப் புகழேந்தி கூறியிருக்கின்றார். அது போலவே மற்றும் புலவர்களும் பாடியிருப்பதாக அநந்தம் திருஷ்டாந்தம் சொல்லலாம். தாமரைப்பூவில் தேனும், தேனைப்பேணிவைப்பதற்கான உறுப்புகளும் உளவா? வண்டு தாமரை மலரை நாடிச்செல்வது தேனையுண்ணவா? மகரந்தப் பொடியைத்தின்னவா? இந்த விஷயத்தைப்பற்றி அறிவுடைய தாவர நூல் வல்லவர்கள் தக்க அத்தாக்ஷியோடு விளக்கிக்காட்டும்படி வேண்டுகிறேன்.

ஓர் மாணவன்.

———(:o.)———

காலம் சென்ற

## தி. பா. சிவராமபிள்ளையவர்கள்.

——(:0:)——

திருநெல்வேலி இந்துக் கலாசாலைப் பிரதமத் தமிழ்ப் பண்டிதர் தி. பா. சிவராமபிள்ளை அவர்கள் சிவபதமடைந்ததாகக் கேட்டு மிக வருந்துகின்றோம். தமிழ்மொழி வளர்ச்சிக்காக அவர்கள் பட்டிருக்கும் பாடு அற்பசொற்பமல்ல. செய்யுள் நடையிலும் வசன நடையிலும் அநேக விஷயங்கள் எழுதியுள்ளார்கள். அவைகளையும் அவர்களது ஜீவிதசரித்திரச்சுருக்கத்தையும் நமது "தமிழனில்" பிரசுரிக்குமாறு முயன்று வருகிறோம். அவர்களதுமாணத்துக்காற்றாது ஸ்ரீவில்லிபுத்தூர் C. M. S. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் M. P. ஈஸ்வரமூர்த்திப் பிள்ளையவர்கள் பாடிய இரங்கற்பாக்களைக் கீழே சேர்த்திருக்கின்றோம்.

வெண்பா.

பண்டிதனே! பாவலனே! பண்ணவனே! நாவலனே!
கண்டிதஞ்சொல் வல்லவனே! கற்பகமே! —எண்டிசையும்
செல்லும்புகழோய்! சிவராமா! சேர்ந்தனையோ?
புல்லும் சிவன் பாதம் போய். (1)

இந்துகலை தானிழக்க, ஏந்திழையாள் தாலிழக்கச்
செந்தமிழ் உன்நாவிழக்கச் சென்றனையே! —நொந்துமனம்
புண்ணாகான் புலம்பல் புண்ணியமா காதுகண்டாய்!
எண்ணாய்! இரங்காய்! இனி. (2)

## சமாசாரத்திரட்டு.

——(.o:)——

மிஸ். M. E. பிராடன் என்னும் விதவைக்கு இப்பொழுது 75 வயது ஆகிறது. இது வரையிலும் அவள் 75 நாவல்கள் எழுதிப்பிரசுரம் செய்திருக்கிறாள். 53-வருஷங்களுக்குமுன் அவளுடைய முதல் நாவல் வெளிவந்தது. அதுமுதல் இதுவரை, சராசரி எட்டுமாதத்துக்கு ஒன்றுவீதம் வெளியிட்டிருக்கிறாள்.

ஏழைக்குடும்பங்களுக்கு அரசாங்கத்திலிருந்து பொருளுதவிசெய்யவேண்டுமென்று பிரஞ்சு பார்லிமெண்டில் ஒரு சட்டம் பிறந்திருக்கிறது. மூன்று குழந்தைகளுக்கு மேலுள்ள ஒவ்வொரு குடும்பத்தலைவனுக்கும் அவனுடைய வரும்படி குடும்பச்செலவுக்குப்போதாமலிருந்தால் அரசாங்கத்திலிருந்து உதவிசெய்யப்படுமாம். தகப்பன் இறந்ததினாலாவது பரதேசம் போய்விட்டதனாலாவது குழந்தைகள் தாயின் சம்ரக்ஷணையிலிருக்குமானால் ஒவ்வொரு குழந்தைக்கும் 13 வருஷம் வரை உதவிசெய்யப்படுமாம். ஒவ்வொரு குழந்தைக்கும் வருஷமொன்றுக்கு 60 முதல் 90 வரை பிரான்குகள் கொடுக்கப்படுமாம்.

தாவீது ஹட்டண்: என்னுமொரு ஸ்காட்லந்து தேசத்தான் இரண்டு எலிகளை நூல்நூற்பதற்காக உபயோகித்து ஏராளமான பணம் சம்பாதிக்கிறானாம்.

நசுக்கப்பட்ட விரல்கள்:— விரல்கள் எந்தக்காரணத்தினாலாவது நசுங்கிப்போனால் உடனேபொறுக்கக்கூடிய வெந்நீரில் அந்த விரலை அமிழ்த்த வேணடியது. அப்படிச்செய்வதில் அந்த விரலின் நகமானது பருத்து இரத்த ஓட்டத்திற்கு இடைவெளி விஸ்தாரப்படுத்திக் கொடுக்கிறது. இரத்த ஓட்டத்திற்கு இடம் ஏற்படவே வலி குறைவாகும். உடனே ரொட்டியைத் தண்ணீரில் நனைத்துக் கட்டவேண்டும்.

க்ஷயகாச வியாதிக்கு ஓர் உபாயம்:— ஆகாயக் கப்பல்களின் உதவியால் ஆகாய மண்டலத்தின் மேற்சென்று சுத்தமான காற்றை உட்கொண்டு க்ஷயகாச (Tuberculois) வியாதியால் வருந்துபவர்கள் வெகு சீக்கிரத்தில் சௌக்கியம் பெறலாமென்று லெப்டெனண்ட்கர்னல் J. D. N. டொனிகன் ஆர். ஏ. எம். ஸி. (J. D. N. Donegan R. A. M. C.

என்பவர் கூறுகிறார். இப்போது ஆகாயக்கப்பல் ஆகாயமண்டலத்திலேயே ஸ்திரமாய் நிற்கும்படி நங்கூரம் போடும் உபாயமொன்று கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இன்னும் கொஞ்சகாலத்தில் க்ஷயகாசரோகமுள்ளவர்களையும் இன்னும் இதர வியாதிஸ்தர்களையும் நிச்சயமாகவே ஆகாயக்கப்பல்களில் ஏற்றிக்கொண்டு உயரப்பறந்து சுத்தமான காற்றைச்சுவாசிக்கும்படி செய்துபிறகு ஸாவதானமாய் வியாதிஸ்தர்களை ஆஸ்பத்திரியில் அவரவர் ஸ்தானத்தில் கொண்டுவந்து சேர்ப்பிப்பதும் அநுஷ்டானத்திற்கு வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். பத்து வருஷங்களுக்குமுன், உயரப்பறக்கக்கூடிய ஆகாயக்கப்பல்களும் நிர்மிக்கப்படுவது ஸாத்தியமோ என்று தான் நாம் எண்ணியிருந்தோம். இப்போது 1-நாளுக்கு 830 மைல் தூரம் ஆகாயக்கப்பல்களின் மூலமாய் ஏறிப் பிரயாணிப்பதை பிரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். மேற்சொன்ன, வியாதிஸ்தர்களை சொஸ்தப்படுத்தும் முறை இன்னும் கொஞ்சகாலத்திற்குள் சித்திப்பதை நாம் அறிவோம்.

குழந்தைகளை தபாலில் அனுப்புகிற ஆச்சரியம்:-- எல்லா ஆச்சர்யங்களுட் பிறக்கிற ஆச்சரிய கண்டமாகிய அமெரிக்காவிலிருந்து குழந்தைகளை தபாலிலனுப்புகிற அதி ஆச்சரியச் செய்தி வருகிறது. அமெரிக்க ஐக்கியமாகாணத்தில் குழந்தைகளைப் பெற்றோர் தூரத்திலிருக்கும் பாட்டன் பாட்டிமார் பார்க்க விரும்பினால் பிள்ளையொன்றை 10 பவுனுக்கு இன்ஷியூர்செய்து தபாலில் அனுப்புகிறார்கள். இதற்குத் தபாற் கட்டணம் 7 பென்ஸ்.

பெருங்கதலிவாழைச்சாறு:—இது நாம் அருவருக்கும் ஓர்வஸ்து. இதை நாம் கையால் தொடுவதில்லை. குழந்தைகளை இதன் சமீபத்திலே விடுவதில்லை. ஆனால் சில நாடுகளில் இதை நாடுவோர் பலர். ஏனெனில் பாம்பின் கொடிய விஷத்திற்கு இதொரு அதிசயமருந்தாம். இலங்கை டைம்ஸ் பத்திரிகையில் ஒருவர் இவ்வாறு எழுதுகின்றனர். "பாம்பு என் நாய்களைக் கடித்தால் நான் அவைகளுக்கு நெய்யும் எலிமிச்சம்பழச்சாறும் உள்மருந்தாகக் கொடுத்து, காயங்களைக்கீறி, கரும் இரத்தத்தைவடியவிட்டு அவைமேல் காண்டித்தைலத்தை (Condy's fluid) தண்ணீர் சேராமற் போடுவது வழக்கம். காயம் நாவிலானாற் சுகம் வரும். ஏத்தன் வாழைச்சாறு சர்ப்பவிஷம் நீக்கும், என்று சந்தேகத்துடன் சற்றுமுன் வாசித்தேன். அதற்குப்பின் எனது புல்டெறியர் நாய் ஒரு நல்லபாம்பைப் பிடிக்க, நாலிடங்களிலே நாவிலும், இரண்டி

டங்களிலே முன்னங்காலிலும் கடிபட்டது. நான் என் பொதுவான மருந்தைக்கொடுத்தேன். சுகத்தைக் காணவில்லை. வரவர நாய் தளர்ந்து நீண்டது. அப்பொழுது வாழைச் சாற்றை நினைத்தேன். உடனே ஒரு பெரிய பெருங்கதலி வாழையை வெட்டி எத்தன் அல்லது நேந்திரன் வாழை, அதன் பட்டையைப் பிழிந்து சாறெடுத்து இரண்டு நேரமாக இரண்டு கோப்பை கொடுத்தேன். ஒரு மணிநேரத்தில் நாய் எழுந்தது. மறுநாள் முற்றிலும் சுகமாயிற்று". இவ்வுலகில் பலரும் இச்சாற்றைப் பற்றி இந்தச்சாக்ஷி கூறுகின்றனர். ஆதலால் சில பயங்கர தருவாய்களில் இவ்வாழைச்சாறு ஞாபகத்தில் வருவதாக.

திருத்தம்:— இப்பத்திரிகையுடன் அனுப்பும் "நவமணிமாலை" அநுபந்தத்தில் 4–வது கண்ணியில் 2–வது அடியில் "அமுதின்விலை" என்பதை "அமுதின் சுவை" எனத்திருத்தி வாசித்துக்கொள்க.

## போஷகர் வரவு.

| | | கூ | அ | ப. |
|---|---|---|---|---|
| ஸ்ரீமாந் பெத்தாச்சி செட்டியாரவர்கள் M. R. A. S. | அக்டோபர் நன்கொடை | 30 | 0 | 0 |
| ,, K. G. சேஷய்யரவர்கள் B. A, B. L, M. R. A. S. | | 4 | 0 | 0 |
| ,, T. லக்ஷ்மணபிள்ளையவர்கள் B. A. | (6 மாசத்திற்கு) | 2 | 0 | 0 |


இனும்! இனும்!! இனும்!!!

## ஓர் அழகான வெள்ளி கெடியாரம்

ஒரு ரூபாய் மணியாடர் அனுப்பினால் சரியான காலத்தை காட்டக்கூடியதும் வெகு அழகாய் உள்ளதுமான சொக்கவெள்ளிக் கெடியாரத்தின் உடன்டிக் கையுடன் வெள்ளி மெலாம் பூசிய கெடியாரச் சங்கிலியையும் சேர்த்து அனுப்பப்படும். இவ்விதமாய் கொடுக்கிறதற்குக் காரணம் என்னவென்றால் எங்கள் கம்பனியின் பெயர் பிரக்யாதியாகும் பொருட்டே அல்லது வேறல்ல. சுவல்பகாலம் தான் இம்மாதிரியாகக் கொடுக்கப்படும்.

கெடியாரம் ஒருநிமிஷமும் வித்தியாசமின்றி ஓடக்கூடியது. அதற்கு இரண்டு வருஷம் உத்திரவாதப் பத்திரத்துடன் அனுப்பப் படும்.

| | |
|---|---|
| கேட்லாக்கும் விபரமும் அரையணாஸ் டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும். | ரூபல்வாச் கம்பனி மெமோரியல் ஹால்; பார்க் டவுன் மதராஸ். |